# பாட்டாளி சிந்தனை

Volume 24 No. 1
September 2013

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா
SUCI
தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3



26 செப்டம்பர் 1893
9 செப்டம்பர் 1976

## தோழர் மா சே துங் அவர்களுக்கு செவ்வணக்கம்!

*“முதலாளிகளை பாதுகாப்பதற்கும் பாட்டாளி வர்க்கத்தை முடக்குவதற்கும் சட்டங்களை இயற்ற ‘பாராளு மன்றங்களை’ முதலாளிகள் வைத்திருக்கிறார்கள்; இந்தச் சட்டங்களை அமுல்படுத்துவதற்கும் அச்சட்டங்களில் உள்ளடங்கியிருக்கும் அனுகூலங்களையும் தடையாணை களையும் அமுலாக்குவதற்கும் ‘அரசாங்கங்களை’ வைத் திருக்கிறார்கள்; முதலாளிகளின் நலனை பாதுகாப்பதற்கும் பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகளை நசுக்குவதற்கும் அவர்கள் ‘இராணுவத்தையும்’ ‘போலீஸையும்’ வைத்திருக் கிறார்கள்; அவர்களின் செல்வம் சுற்றிவருவதற்கு ஒரு நம்பகமான பணக்களஞ்சியமாகப் பணியாற்ற ‘வங்கிகளை’ வைத்திருக்கிறார்கள்; பொருளுற்பத்தியை ஏகபோகமாக்கும் கருவிகளாக ‘தொழிற்சாலைகளை’ வைத்திருக்கிறார்கள். ஆகவே கம்யூனிஸ்டுகள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவில்லையெனில் இவ்வுலகில் எந்த புகலிடத்தையும் கண்டுபிடிக்க முடியாது.*

***– மா சே துங்***

*(கம்யூனிசமும் சர்வாதிகாரமும் நவம்பர் 1920 ஜனவரி 1921இல் சாய் ஹோசென்க்கு எழுதிய இரு கடிதங்களிலிருந்து எடுக்கப்பட்டது.)*

## சிரியாவின் மீது தாக்குதல் தொடுக்க முயற்சிக்கும் யு எஸ் ஏகாதிபத்தியவாதிகளை எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாக கண்டிக்கிறது

*தோழர் பிரவாஸ் கோஷ், பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஆகஸ்ட் 29, 2013 அன்று வெளியிட்ட அறிக்கை:*

சிரியா தனது எதிரிகளின் மீது ரசாயன ஆயுதங்களை உபயோகித்தாக எழுந்த குற்றச் சாட்டை சாக்காகக்கொண்டு அந்நாட்டின் மீது தாக்குதல் தொடுக்க யு எஸ் ஏதாதிபத்திய வாதிகள் மற்றுமதன் பிற ஏகாதிபத்திய கூட்டாளி களின் கொடிய, கொள்ளைக்கார திட்டத்தையும் – ஈராக்கின் மீது ராணுவ ஆக்கிரமிப்பு செய் வதற்கு முன்பாக அதன் மீதும் இதே மோசடி குற்றச்சாட்டை அவர்கள் கூறினர் – அதன் மூலமாக ஈராக் போலவே இந்நாட்டின் மீதும் பெரும் சூறையாடலையும் அழிவையும் கொணர் வதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மற்றொரு இறையாண்மையுள்ள நாட்டை நசுக்கவும் ஆதிக்கம் செலுத்தவும் மேற்கு ஆசியாவில் ஆயுத மோதலை தூண்டிவிடவும் போரின்மூலம் படுகொலையை நோக்கி மீண்டு மொருமுறை இம் மனிதஇனம் தள்ளப்படு வதற்குமான இக்கொடிய சதியை முறியடிக்க அணிதிரளுமாறு யுத்த எதிர்ப்பு அமைதி விரும்பும் அனைத்து மக்களையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

தாங்கள் விரும்புவதுபோல் அவர் களுடைய எதிர்காலத்தை அமைத்துக்கொள்ளும் முழு சுதந்திரம் சிரியமக்களுக்கு அளிக்க வேண்டு மென நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந் நியாயத்தின் பக்கம் துணைநிற்குமாறும் சிரியாவை நசுக்கவும் உலகின் மீது மேலாதிக்கம் செலுத்தவுமான யு எஸ் ஏகாதிபத்தியவாதி களின் இந்த நயவஞ்சக திட்டத்தை முறியடிக்கு மாறும் உலகின் அனைத்து தேசபக்திமிக்க மக்களையும் வேண்டுகிறோம்.

# ஆகஸ்ட் 5 : பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் 37வது நினைவு தினம்

இக்காலக்கட்டத்தின் மார்க்சிய சிந்தனை யாளர்களில் ஒருவரும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் 37வது நினைவு தினத்தை ஆகஸ்ட் 11ஆம் தேதி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி அனுஷ் டிக்கும் வகையில் தேனி, அல்லி நகரில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிற மாவட்டங்களி லிருந்தும் கட்சியின் தொண்டர்களும் அனுதாபி களும் ஆதரவாளர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)ன் மாநில அமைப்புக் கமிட்டியின் செயலாளர் தோழர் A ரெங்கசாமி அவர்கள் பொதுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றினார். சிறப்புரையாற்ற வந்த எமது கட்சியின் மத்தியக்கமிட்டி உறுப்பினரும் கேரள மாநில கமிட்டியின் செயலாளருமான தோழர் CK லூகோஸ் அவர்கள் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணி வித்து மரியாதை செலுத்தினார். தோழர் சிப்தாஸ் கோஷ் மீதான பாடலுடன் கூட்டம் தொடங்கியது.

*தோழர் CK லூகோஸ் அவர்கள் ஆற்றிய சிறப்புரையை சுருக்கமாக கீழே தருகிறோம்.*

தோழர்களே,

இங்கே கூடியிருக்கும் அனைத்துத் தோழர் களுக்கும் முதலில் எனது புரட்சிகர வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது கட்சியின் ஸ்தாபகர் தோழர் சிப்தாஸ் கோஷ் மறைந்த ஆகஸ்ட் 5 ஆகிய இதே நாளில்தான் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் மார்க்ஸ் அவர்களின் நெருங்கிய தோழர் பிரடெரிக் ஏங்கெல்ஸ் அவர்கள் மறைந்தார். இதே நாளில்தான் உலகம் முழுவதும் அவரின் நினைவு தினமும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்தத் தருணத்தில் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாசேதுங் ஆகியோரின் மதிப்புமிக்க சீடரும், மார்க்சிசத்தை விரித்துரைத்து, செழுமைப்படுத்தியவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் சிந்தனைகளை நினைவு

தொடர்ச்சி 2ம் பக்கம்



**ஆகஸ்ட் 5, 2013 அன்று கல்கத்தாவில் நடைபெற்ற பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் 37வது நினைவுதினப் பொதுக்கூட்டம். உள்ளே, கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் உரையாற்றுகிறார்.**

# ஆகஸ்ட் 5 : பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் 37வது நினைவு தினம்

1ம் பக்கம் தொடர்ச்சி

கூர்வது பொருத்தமாக இருக்கும். ஆனால் அவை களை இன்றைய சூழலில் இணைத்து பார்ப்போமானால் அவருடைய அறிவுப் பூர்வமான, மிகச்சரியான ஆய்வுகள் நம்மை வியப்பில் ஆழ்த்தும். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் நமது கட்சியான எஸ்.யு.சி.ஐ (கம்யூனிஸ்ட்)ஐ ஏப்ரல் **24, 1948**ல் ஒருசில தோழர் களைக் கொண்டு துவக்கினார். அவருக்கு வயது **24** இருக்கும் பொழுதே, கட்சியை கட்டுவது மட்டு மல்லாது, அந்த சிறுவயதிலே உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தைப்பற்றியும் அதன் போதாமைகள் பற்றியும் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் எந்த வழியில் எந்த முறையில் செல்லவேண்டுமென் பதையும் மிகத் தெளிவாக உரைத்திருந்தார்.

சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முக்கியத்துவத்தை மிகவும் வலியுறுத்திய அதே சமயம் அவ்வியக்கத்தின் போதாமைகள், குறை பாடுகளைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. சர்வ தேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சர்வதேசிய சூழ் நிலைபற்றிய எடுக்கப்படும் ஆய்வுகளை மற்ற நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் கண்மூடித்தன மாக ஏற்றுக் கொள்வதையும், அனைத்து நாடு களின் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையில் இயக்க வியல் ரீதியிலான உறவுக்குப் பதிலாக இயந்திரகதி யிலான உறவுகள் இருப்பதையும் சுட்டிக் காட்டினார். பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் "அத்தாரிட்டி" என்ற கருத்துணர்வோடு, குருட்டுத்தனமாக தலைவருக்கு அடிபணிதல் அல்லது எதேச்சதிகார போக்குகள் என்ற கருத்துக்களோடு ஒப்பிட்டு குழப்பிக்கொண்டிருப் பதையும் சுட்டிக்காட்டினார். இத்தகைய போக்கு களைக் களையாவிடில் அது தவிர்க்கவியலாமல், முதலாளித்துவ மீட்சிக்கு கொண்டுவிடும் என்றும் எச்சரித்தார்.

சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தை மிகுந்த மரியாதையோடு ஏற்றுக்கொண்ட அதே சமயம், அதன் குறைபாடுகளையும் அதே மரியாதையுடன் சுட்டிக்காட்டினார். நமது நாட்டில் அன்று இருந்த ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தோழர் சிப்தாஸ் கோஷைப் பார்த்து ஸ்டாலினை விமர்சிக்கும் அளவு பெரிய தத்துவஞானியாயென வினவினர். எள்ளி நகையாடினர். அதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தோழர் ஸ்டாலின் அவர்கள் மறைவிற்குப் பிறகு குருச்சேவ் ஸ்டாலினுக்கு எதிரான நிலையெடுத்தபோது அதை அப்பட்ட மாக ஆதரித்தது. குருச்சேவின் திருத்தல்வாதத்தை ஆதரித்தது. அதேசமயம், தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள், ஸ்டாலினை விமர்சித்து சிறுமைப் படுத்துவது என்பது லெனினையே எதிர்ப்பது என்று குருச்சேவின் திருத்தல்வாத போக்கினை கடுமையாக விமர்சித்தார்.

**1956**ம் ஆண்டு குருச்சேவ் தலைமையில் நடை பெற்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் **20**வது காங்கிரசில், ஏகாதிபத்தியம் போர்களை உரு வாக்கும் என்ற லெனின் அவர்களது கோட் பாட்டினை குருச்சேவ் தலைமையிலான சோவியத் கட்சி திருத்தி ஏகாதிபத்தியங்கள் போர்களை உருவாக்கும் சக்தியை இழந்துவிட்டன. சோசலிச முகாம் மிகவும் வலிமையான நிலையில் இருக்கிறது என்றும் இரண்டாவது, பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது சமாதான வழியில் ஆயுத மின்றி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று சோசலிசத்தை நிறுவமுடியும் என்றும், மூன்றாவதாக பாராளுமன்றங்கள் அனைத்து மக்களின் நலன்களையும் காக்கும் அமைப்பாக செயல்படமுடியும் என்றும் **1956**ல் நடைபெற்ற **20**வது காங்கிரஸில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. இதுபோன்ற பல கருத்துக்களை தோழர் சிப்தாஸ் கோஷ் ஆய்வு செய்து **20**வது காங்கிரஸ் திருத்தல்வாதத்தின் மடை கதவுகளை திறந்துவிடும் என்று கூறினார்.

ஏகாதிபத்தியங்கள் தங்களின் நெருக்கடிகளை தீர்த்துக்கொள்ள போர்களை உருவாக்கும். அந்த நெருக்கடிகள் என்றும் தீர்க்கப் படமுடியாதவை. ஏகாதிபத்தியங்களின் தலைமையகமான அமெரிக் காவின் அடிப்படைப் பொருளாதாரம் இராணு வத்தை நம்பியே இருக்கிறது. போர்கள் இல்லை யெனில் அமெரிக்கப் பொருளாதாரம் நொறுங்கி விடும். ஆகவேதான், போர்கள் இல்லையெனில் ஏகாதிபத்தியங்களின் பொருளாதாரம் மயான மாகிப் போகும் என்று லெனினிய அடிப்படையில் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.

தோழர்களே, அடிப்படையில் சோசலிச புரட்சிபற்றியும், பூர்ஷுவா பாரளுமன்றத்தின் வேற்றுமைபற்றியும் நாம் புரிந்து கொள்வது அவசியம். பாராளுமன்றம் முதலாளித்துவ அமைப்பைச் சார்ந்தது, அது அனைத்து மக்களுக்கும் நன்மையைக் கொடுக்கும் அமைப்பாக எப்படி இருக்கமுடியும்? பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்களில் ஒருவரான தோழர் ஸ்டாலின், "ஏகாதிபத்தியங்கள் வேறு எந்த நாட்டின் மீது போர் தொடுத்தாலும் அது சோவியத் யூனியன் மீது படையெடுப்பதற்கு சமம்" என்று எச்சரித் திருந்தார். ஆனால், குருசேவ் தலைமை ஏகாதி பத்திய நாடுகள் மற்ற நாடுகளின் மீது போர் தொடுத்தபோது சோவியத் யூனியன் தலையிட்டால் அது அணு ஆயுதப்போராக முடிந்துவிடும் என்று பயந்து தலையிடாமல் இருந்தார். இதனால், சோசலிச முகாம் அதுவரை போர்களைத் தடுத்து அமைதியை நிலைநாட்டியவைகள் நீர்த்துப் போயின. பாட்டாளி வர்க்கம் முதன்முதலில் பாரீஸ் கம்யூனில் அதிகாரத்தைப் பிடித்தது. ஆனால் அது தன் ஆட்சி அதிகாரத்தைக் காப் பாற்ற முடிந்ததா? இல்லை. ஆகவேதான், மார்க்ஸ்ஸும், ஏங்கெல்ஸ்ஸும் மற்றும் லெனின் அவர்களும் முதலாளித்துவத்தை புரட்சியின் மூலம் தூக்கியெறியாமல், பாட்டாளி வர்க்கம் சோசலிச சமூக அமைப்பை கட்ட முடியாது என்றார்கள். இந்த அடிப்படைக் கோட்ப்பாட்டை திருத்த முயன்றது குருசேவ் தலைமையிலான திருத்தல்வாதத் தலைமை.

இப்படிப்பட்ட திருத்தல்வாதம் எப்படி வந்தது? லெனின், ஸ்டாலின் அவர்களால் கட்டப் பட்ட சோசலிச சோவியத் யூனியனும், சோசலிச முகாமும் வீழ்ந்ததற்கு என்ன காரணம்? சோசலிச சமுதாயம் ஈட்டிய முன்னேற்றம், வெற்றி களெல்லாம் எப்படி வீணானது என்பதை தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் சரியாக ஆய்ந்து, அதற் கான காரணங்களை தெள்ளத்தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளார். முதலில் அவர் சுட்டிக்காட்டியது தனிநபர்வாதம், சோசலிச அமைப்புக்குள்ளேயே கூட இருக்கும் தனிநபர்வாதம், திருத்தல்வாதத்தின் அடிப்படைக் கூறாக இருப்பது இந்த சோசலிச தனிநபர்வாதம் தான் என்று கூறினார்.

சோவியத் யூனியனில் பாட்டாளி வர்க்கம், முதலாளித்துவ வர்க்கத்தை அரசு அதிகாரத்தி லிருந்து தூக்கியெறிந்திருக்கிறதே தவிர, முதலாளித் துவ வர்க்கம் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட வில்லை. சோசலிச சமூகம் என்பது வர்க்கமற்ற சமூகமல்ல. மாறாக முதலாளித்துவ வர்க்கம் சிறு பான்மை என்றாலும் கூட, அது கலாச்சார உற்பத்தியில் இன்னும் தன் ஆதிக்கத்தை செலுத்திக் கொண்டிருக்கிறது. அதிகாரத்தில் இருக்கும் முதலாளித்துவ வர்க்கத்தைவிட அதிகாரம் இழந்து விட்ட முதலாளித்துவ வர்க்கம் பலமடங்கு சக்தி வாய்ந்தது என்பதை மாபெரும் லெனின் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். சோசலிச சமுதாயத்தில் கூட கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றில் மக்களி டையே முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ குணங்கள், பழக்க வழக்கங்கள் குடியிருக்கும். இவைகளை, தொடர்ந்து எதிர்க்க வேண்டும். இப்படிப்பட்ட எதிர்மறைக்கூறுகள் மக்கள் மனதில் புதைந்து கிடப்பதை புரிந்துகொள்வது எளிதல்ல. கண்ணுக்குத்தெரியாத எதிரியை இனங்கண்டு போராடுவது கடினமான விஷயம் தான். சோவியத் யூனியனின் சோசலிச சமுதா யத்தில் சிறு உற்பத்தியாளர்கள் பெருத்த எண்ணிக் கையில் இருந்தனர். இவர்கள் சோவியத் சமுதா யத்தில் குறிப்பிட்டளவு முதலாளித்துவ தனிநபர் வாத, தனிச்சொத்து மனப்பான்மை என்கிற குணங் களை பிரதிபலித்து, மக்களிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். கூடவே சோவியத் குடியரசில் பணிபுரியும் அதிகாரிகள், பொறி யாளர்கள், இலக்கியவாதிகள் அதிகாரத்துவத்தைப் பிரதிபலித்தனர். முதலாளிகள் உற்பத்தியை பெருக்க, தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவர். இது ஊக்கத்தைக் கொடுப்பதோடு, பேராசையையும் கொடுத்துவிடுகிறது. இது ஒரு முதலாளித்துவ குணாம்சம். சோவியத் யூனியனில் உற்பத்தியை பெருக்க வேண்டி இந்த முதலாளித் துவ வழியை பின்பற்றி பாட்டாளிகளுக்கு ஊக்கத் தொகையளித்து அவர்களின் பாட்டாளிவர்க்கப் பண்புகளை சீரழித்துவிட்டனர். கம்யூனிசத்தின் அடிப்படை இயந்த சக்திக்கேற்ற உழைப்பு உற்பத்தியில் தேவைக்கேற்ற பங்கு. ஆனால், சோசலிச சமுதாயத்தில் எந்த ஒரு சலுகை களையும் யாருக்கும் அளிக்கமுடியாது. சோசலிச சமுதாயத்தில் திறமைக்கேற்ற உழைப்பு உழைப் பிற்கேற்ற ஊதியம் என்ற கோட்பாடுதான் அமுலில் இருக்கும். ஆனால் மக்களை கம்யூனிச சமூகக் கோட்பாட்டுக்கு இட்டுச் செல்லும் போராட்டத்தை மக்களிடம் உக்கிரப்படுத்த வேண்டும்.

தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் திரும்பத் திரும்ப குறிப்பிடும்பொழுது சோசலிச சமூகத்தை பொருளாதாரரீதியாக வளர்த்தல் மட்டுமல்ல மாறாக கலாச்சார, பண்பாடு மற்றும் ஒழுக்க நீதிநெறிகள் ரீதியாகவும் வளர்த்தெடுக்கவேண்டும் என்றார். அப்படி உருவாக்கும்பொழுதுதான் உண்மையான சுதந்திரத்தை மக்கள் பெறமுடியும். சோசலிச சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த புது வகையான சோசலிச தனிநபர்வாதம், கோரமான தன் தலையை நீட்டுகிறது என்று சுட்டிக் காட்டினார். தனிநபர்வாதம், என்பது மிகவும் மோசமான, கீழ்த்தரமான வடிவத்தை எட்டி யிருக்கும் இவ்வேளையில், தனிநபர்வாதத்தை எதிர்த்துப் போராடாமல் கம்யூனிசகுணாம்சத்தை பெறமுடியாது என்பதும் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் முக்கியமான பங்களிப்பாகும்.

ஆரம்பத்தில் முதலாளித்துவ சமூகம் மனிதநேயக் கோட்பாடுகளின் அடிப்படையில் தோன்றியது. இன்று முதலாளித்துவம் அழுகி சாகும்தருவாயில் இருக்கும் பொழுது, தனிநபர் வாதம் என்ற மோசமான குணாம்சத்தை பிரதி பலிக்கிறது. தங்களின் நலனை சமூகத்தின் நலனோடு ஐக்கியப்படுத்தும் போராட்டத்தில் இருப்பவர்கள்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருக்கமுடியும் என்ற கோட்பாட்டை முன்வைத்தார் தோழர் சிப்தாஸ்கோஷ் அவர்கள். அப்படிப்பட்டவருக்கு தனிநலம், தனிப்பட்ட வாழ்க்கை, தனிச்சொத்து, தனிச்சொத்து மனப் பான்மையென்பது இருக்கமுடியாது. மாறாக அவர் புரட்சியோடும், கட்சியோடும் ஐக்கியப்படுத்திக் கொள்ளவேண்டும். இது, தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு அளித்த அளப்பரிய பங்களிப்பாகும்.

இதன் காரணமாகத்தான் தனிநபர்வாதத்தின் தாக்கத்தை முறியடிக்க தோழர் மாவோ அவர்கள் கலாச்சாரப் புரட்சியை நடத்தினார். இதை "பிரம்மாண்டமானது" என தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களும் பாராட்டினார். தோழர் மாவோவிற்கு பின்பு வந்த திருத்தல்வாத தலைமை இக்கலாச்சார புரட்சியை புறக் கணித்ததின் போக்கில் சோசலிச சீனம் ஒரு முதலாளித்துவ நாடாக மாறியதை இன்று நாம் வேதனையுடன் காண்கிறோம்.

தோழர் சிப்தாஸ் கோஷின் உற்றதோழரும், அவருக்குப் பின் நம்கட்சியின் பொதுச் செய லாளருமான மறைந்த தோழர் நிஹார் முகர்ஜி அவர்கள், சோவியத் யூனியனில் கோர்ப்பசேவ் அறிமுகப்படுத்திய "ஃபெரஸ்ட்ரோயிக்கா, ஃகிளாஸ்நாஸ்ட்" என்று சொல்லப்பட்ட திறந்த மனப்பான்மை மற்றும் ஜனநாயகம் என்ற கோட்பாட்டை வெளிப்படுத்திய உடனேயே அவர் சிப்தாஸ் கோஷ் சிந்தனைகளின் அடிப்படையில் ஆராய்ந்து" இது எதிர்ப்புரட்சியின் திட்டவரை படம்" என்றும் இது எதிர்ப்புரட்சிக்கான மதகு களைத் திறந்துவிடும்" என்றும் எச்சரித்தார்.

ஆனால் நமது நாட்டில் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிகொள்பவர்கள் "ஃபெரஸ்ட்ரோயிக்கா,

தொடர்ச்சி 7ம் பக்கம்

# தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் போதனைகளிலிருந்து

## மக்கள் இயக்கங்களை சரியாக வழிநடத்துவது குறித்து

*பல்வேறு நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து பல்வேறு தரப்பு மக்கள் இன்றைக்கு பல போராட்ட இயக்கங்களை நாடு முழுவதும் கட்டி வருகின்றனர். பல சமயங்களில் இப்போராட்டங்கள் தோல்வியை தழுவுகின்றன. அல்லது தர்க்கரீதியான முடிவாகிய புரட்சிகர இயக்கங்களாக உருப்பெறுவ தில்லை. இத்தகைய சூழ்நிலையில், மக்கள் போராட்டங்களை சரியான பாதையில், சரியான புரட்சிகர தலைமையில் எவ்வாறு வளர்த்தெடுப்பது, அவற்றை எவ்வாறு வழிநடத்துவது என்பன பற்றிய தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் கூறிய கருத்துக்கள் பலவற்றை அவர் ஆற்றிய பல்வேறு உரைகளிலிருந்து தொகுத்து இக்கட்டுரையில் வழங்குகிறோம். மக்கள் போராட்ட இயக்கங்கள் வளர வேண்டும் என்று விரும்புவோருக்கும் இத்தகைய இயக்கங்களை வளர்த்தெடுப்பதில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள தொண்டர்களுக்கும் இக்கட்டுரை சிறந்த வழிகாட்டியாக அமையும் என்று கருதுகிறோம்.*

...இந்நாட்டு மக்கள் திரும்பத்திரும்ப போராட்டங்களில் வெடித்தெழுந்துள்ளனர் என்பதை வரலாற்றில் பரிச்சயமுள்ளவர்கள் அறிவர். நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும்கூட எத்தனை சுய தியாகங்கள் செய்திருக்கிறார்கள் எந்த அளவிற்கு இரத்த ஆறு ஓடியிருக்கிறது! எத்தனை முறை தொழிலாளர்களும் விவசாயிகளும் இளைஞர்களும் மாணவர்களும் இன்னுயிர் ஈந்திருக்கிறார்கள். புரட்சிக்கான எத்தகைய உத்வேகத்தோடு இந்நாட்டு மக்கள் திரும்பத்திரும்ப இயக்கங்களுக்கு முன்வந்து மரணத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள்! ஆனால் விளைவு என்ன? பிற்போக்குத்தனமே பலம் பெற்றிருக்கிறது என்று அனைவரும் தற்போது கூறுகிறார்கள். ஒடுக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டு ஜனநாயக இயக்கங்கள் மீது பாசிசத்தாக்குதல்கள் ஏவப்படுகின்றன. ஏன் இப்படி? எவ்வாறு இப்படி நடக்கமுடியும்? ஜனநாயக இயக்கங்களின் வளர்ச்சி இந்நேரம் முதலாளித்துவத்துக்கு முடிவு கட்டுவதற்கு இட்டுச்சென்றிருக்கவேண்டும். புரட்சியின் வெற்றிக்கொடி இந்நேரம் நாட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் புரட்சியின் வெற்றிக்கு அத்தியாவசிய தேவையான பரந்துபட்ட ஆதரவு என்பது மக்களால் கொடுக்கப்பட்டது. தலைவர்களின் அறைகூவலுக்கு செவிமடுத்து புரட்சிக்கான ஏக்கத்தோடு ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் முன்வந்து இயக்கங்களில் குதித்தார்கள். அவ்வாறிருக்க பிற்போக்குத்தனம் எவ்வாறு பலம் பெற்றது? புரட்சிகர இயக்கம்தான் பலம்பெற்றிருக்கவேண்டும்... ஆனால் (நேர்மாறாக) இவ்வாறு ஏன் நடந்தது? (Vol III Page 343)

ஏனெனில் இயக்கங்களில் மக்கள் குதித்த போது புரட்சிகர விழிப்புணர்வின் அடிப்படையில் குதிக்கவில்லை. புரட்சிகர கட்சியை கட்டி வளர்ப்பதற்கும் புரட்சியை நடத்துவதற்கும் தேவையான அன்றாட போராட்டங்களை நடத்துவதற்கான மனப்பான்மை பொறுமை விழிப்புணர்வு அர்ப்பணிப்பு ஆகியவை அவர்களிடத்தில் இல்லை. அதே சமயம் அவர்கள் ஆயிரக்கணக்கில் போராட்டங்களில் குதித்தார்கள். குறிப்பிட்டதொரு பிரச்சினையின் அடிப்படையில் தோன்றிய போராட்ட இயக்கத்தின் சூழ்நிலை மக்களை போராட்டத்திற்குள் ஈர்த்தது. ஆனால் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்கும் அத்தகைய இயக்கங்கள் அடிக்கடி உருவாவதில்லை. மக்கள் மனங்களில் வெறுப்புணர்வு வளரும்போது ஏதேனும் ஒரு பிரச்சினையின் வழியாக அது பீறிட்டு எழும். அங்கே தலைமை என்பது இருந்தாலும் சரி இல்லையாயினும் சரி போராட்டங்கள் வெடித்தெழும் திடீரென தானாக வெடித்தெழுந்த போராட்டங்கள் சில நாட்களுக்குப் பின் தணிந்துவிடும். மீண்டும் விரக்தி தோன்றும். அடக்குமுறையின் கீழ் மக்கள் முனகிக்கொண்டிருப்பார்கள் திடீரென தானாக தோன்றுகிற மற்றொரு கிளர்ச்சியாக வெடித்தெழும்வரை. நமது நாடு கண்ட மக்கள் போராட்டங்கள் அனைத்தும் ஒரு சிலவற்றைத்தவிர இக்குணாம்சத்தையே உடையனவாகும். (Vol III Page 168, 171)

போராட்டங்கள் தொய்வு கண்டு சிதறிப் போகின்ற அத்தருணத்தில் போராட்டத்தில் இனி பாக்கி எதுவும் இல்லை. இப்போது எதுவும் செய்ய முடியாது. இனி எந்தப்பலனும் கிடைக்காது என்று இக்கட்சிகளின் தலைவர்கள் கூறுவார்கள். இப்போராட்டத்தின் பலன்களை தலைவர்கள் எடுத்துக் கொண்டு தேர்தலில் ஆதாயமடைவர். எனவே இயக்கத்தில் எத்தனைபேர் பங்கேற்றனர் அவர்களில் எத்தனைபேர் கொல்லப்பட்டனர்? போராட்டம் எந்த அளவிற்கு உக்கிரமாக நடந்தது போன்ற தகவல்களைத்தந்து கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கு மக்களை தூண்டிக்கொண்டேயிருப்பார்கள். இது மட்டும் போதும்! மற்றெதைப்பற்றியும் அக்கறை யில்லை! இதுதான் போராட்டமென்பது! இத்தகைய போராட்டங்கள் மீண்டும் நடக்கும். இத்தலைவர்களும் தேர்தல் களத்தில் நன்கு ஆதாயமடைவர். (Vol IV Page 66, 67)

மக்களின் கோபம் வெடித்தெழுவது – அது எந்த அளவிற்கு இருந்தாலும் – புரட்சியாகிவிடாது. கிளர்ச்சியானது தானாகவே புரட்சியை கொண்டு வராது. புரட்சி என்பது தற்போது அரசு கட்டமைப்பை முற்றிலும் மாற்றுவதாகும். அதாவது தற்போதுள்ள அரசை தூக்கியெறிந்து அதனிடத்தில் புதிய அரசை நிறுவுவது என்பதே இதன் பொருளாகும். முதலாளித்துவ அரசை தூக்கியெறிவதை பொருத்தவரை சோஷலிச அரசை நிறுவுவதைத்தான் புரட்சி என்கிறோம். இதன் மூலமாக தற்போதுள்ள முதலாளித்துவ பொருளாதார அரசியல் சமூக கட்டமைப்பை முற்றிலும் மாற்றி அவ்விடத்தில் சோஷலிச கட்டமைப்பை நிறுவுவதாகும். இதைத்தான் நாம் புரட்சி என்கிறோம். இப்புரட்சிகர மாற்றமென்பது மக்கள் மனங்களில் தொடர்ந்து வந்துள்ள அதிருப்திகள் பீறிட்டெழுவதன் மூலம் தானாக வருவதில்லை. வரலாறும் விஞ்ஞானமும் இவ்வாறாக கூறவில்லை. இத்தகைய கருத்து விஞ்ஞானப்பூர்வ மற்றதும் வரலாற்றுபூர்வமற்றதுமாகும். கிளர்ச்சியும் புரட்சியும் ஒன்றெனக்கூறுபவர்கள் ஒன்று அறியாமடந்தைகளாக இருக்கவேண்டும் அல்லது ஆழமான கெட்டநோக்கம்கொண்ட தேர்தல் வெறிபிடித்த கேடுவிளைவிக்கவல்ல அரசியல்வாதியாக இருக்க வேண்டும். மக்கள் மனங்களில் உள்ள வெறுப்பால் கிளர்ச்சி இயக்கங்களையும் பொருளாதாரவாதத்தால் இட்டுச்செல்லப்படும் இயக்கங்களையும் நடத்தி இவற்றுக்கு போர்க்குணமிக்க தோரணையை கொடுத்து அவற்றை புரட்சிகரமாக காட்டிக் கொள்வதன் மூலம் இவர்கள் உண்மையான புரட்சிகர இயக்கத்திற்கான தயாரிப்புகளை தவறாக வழி நடத்துகிறார்கள். இதன் மூலம் புரட்சியின் செல்வழிப் போக்கையே தடுக்கிறார்கள். புரட்சியின் பாதையில் தடங்கல் ஏற்படுத்துகிறார்கள். எனவே கிளர்ச்சியும் புரட்சியும் ஒன்றல்ல என்பதை எப்போதும் நினைவிற்கொள்வீர்!

இன்றைக்கு இல்லாவிடினும் இதே மக்கள் கடந்த காலத்தைப்போலவே மீண்டும் கிளர்ச்சி இயக்கத்தில் வெடித்தெழுவர். மக்களின் கோபம் சக்திவாய்ந்த இயக்கமாக வெளிப்படும். இதன் தொடர்ச்சியாக நடத்தப்படும் ஒடுக்குமுறையால் துன்பங்கள் அனுபவித்து அரசாங்கத்திற்கு எதிராக திரும்பினாலும்கூட அவர்கள் மீண்டும் தேர்தல் அரசியல் களத்திற்குள் இழுக்கப்படுவார்கள். அது முதலாளித்துவமாக இருப்பதால் சுரண்டல் வேலையின்மை பிரச்சினையாக அது இருப்பதால் கல்வியின் தரம் எவ்வாறு வீழ்ச்சியடைந்து வருகிறதோ ஒழுக்கம் நீதிநெறி ஆகியன எவ்வாறு நாளுக்கு நாள் அடிமட்டத்திற்கு செல்கிறதோ இவையெல்லாம் தொடர்ந்து இவ்வாறே இருக்கும். இப்பிரச்சினைகளின் நுனியைக்கூட உங்களால் தொடமுடியாது. ஆயிரத்தெட்டு தியாகங்கள் செய்த போதிலும் மனவருத்தங்களால் உந்தப்பட்ட கிளர்ச்சி இயக்கங்கள் மூலமாகவும் தியாகங்கள் வீரமரணங்கள் மூலமாகவும் மட்டுமே உங்களால் புரட்சியை கட்ட முடியாது. புரட்சியை நடத்துவதற்கு திட்டவட்டமான தெள்ளத்தெளிவான அரசியல் லட்சியத்தின் அடிப்படையில் உங்களை நீங்கள் அணி திரட்டிக்கொள்ளவேண்டும். அதாவது அரசியல் விழிப்புணர்வோடு ஒருங்கிணைத்துள்ள மக்களின் நீண்ட நெடிய போராட்டத்தை நடத்தும் திறம் பெற்ற ஸ்தாபனம் ஒன்று கட்டியெழுப்பப்பட வேண்டும். (Vol IV Page 552)

புரட்சிகர அரசியல் சித்தாந்தம் அல்லது புரட்சிகர கருத்தியலின்மீது திடமான நம்பிக்கை இன்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது திடீரென தானாக வெடித்தெழும் பிரபலமான கிளர்ச்சிகளிலிருந்து இந்த நீண்ட நெடிய மக்கள் யுத்தம் வளராது. அவ்வாறு வளர வேண்டுமானால் மக்களின் அதிருப்தியின் மீது நாட்டில் வளரும் தன்னெழுச்சியான இயக்கங்களை நாம் சரியாக வழிநடத்தி அதன்மூலம் மக்களுக்கு புரட்சிகர விழிப்புணர்வூட்டி மக்களின் போராட்டக்கருவிகளை படிப்படியாக வளர்த்தெடுக்க வேண்டும். இத்தகைய சித்தாந்தப்போராட்டத்தை நடத்தாமல் மக்களின் அரசியல் விழிப்புணர்வை கூர்மையாக்க முடியாது. (Vol III Page 168, 71)

சித்தாந்தம் என்ற பதம் பரந்துபட்ட விஸ்தீரணம் கொண்டதாகும். தார்மீக ஒழுக்க நெறிகள் கோட்பாடுகள் நீதிநெறி கலாச்சாரம் என இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட இக்கேள்விகள் அனைத்தும் சித்தாந்தம் என்ற பதத்திற்குள் அடங்கும். நம்நாட்டில் நடத்தப்படும் இயக்கங்களில் குறிப்பிட்டதொரு போக்கு தென்படுகிறது. நாம் போராடுவோம் கோஷங்கள் எழுப்புவோம் ஆனால் என்ன பேசுகிறோம் என்பதில் எவ்வித கட்டுப்பாடும் வைத்துக்கொள்ள மாட்டோம். ஒழுக்கம் கலாச்சாரம் பற்றிய உணர்வுகள் தேவையென கருதமாட்டோம். மரியாதையுடன்கூடிய அடக்கத்தோடு இருக்கவேண்டிய அவசியமில்லை மற்றவர்களிடம் நடந்துகொள்வதில் அடக்கமும் நன்னடத்தையும் கொண்டிருக்க வேண்டிய அக்கறையில்லை இதுபோன்ற போக்குதான் இன்று இயக்கங்களில் காணப்படுகிறது இது மிகுந்த கெடுதல் விளைவிக்கிறது. (Vol III Page 450)

சித்தாந்தப்போராட்டத்தை புறந்தள்ளிவிட்டு எதையும் சாதிக்க முடியாது. எதையாவது செய்யுங்கள் உங்களால் என்னவெல்லாம் முடியுமோ அதையெல்லாம் செய்யுங்கள் நாங்கள் உங்களுடன் இருக்கிறோம் மக்களின் மனப்பான்மை இவ்வாறாக இருக்குமானால் நாட்டின் எதிர்காலம் இருளாகாதான் இருக்கும். இத்தகைய அணுகுமுறையின் தவிர்க்க இயலாத விளைவுதான் இந்நாட்டில் அவ்வப்போது நாம் கண்ட போராட்டங்களாகும். இந்நாட்டின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தங்கள் இன்னுயிரையும் ஈந்துள்ளனர். ஏராளமானோர் தூக்குக்கயிற்றை தழுவியிருக்கிறார்கள். போலீசின் தடையரண்களை மீறி போராட்டங்கள் பல நடத்தப்பட்டுள்ளன ஜனநாயக வெகுஜன இயக்கங்கள் அலையலையாக எழும்பியுள்ளன. இயக்கங்களின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட போலீஸ் இராணுவத்தின் தாக்குதல்களை பல முறை மக்கள் வீரத்துடன் எதிர்த்து இருக்கிறார்கள். ஆனால் இறுதியாக கிடைத்த பலன் என்ன? மக்களின் வாழ்க்கைநிலை நாளுக்கு நாள் மோசமடைந்துள்ளது. நம்மால் ஒருதுளிகூட முன்னேற முடியவில்லை. எதுவுமே நடக்கவில்லையேயென இப்போது சிலர் நொந்துபோகிறார்கள். எல்லா போராட்டங்களும் நடந்தன. இராணுவம் அனுப்பப்பட்டது. இராணுவ டாங்கிகள் வீதிகளில் அணிவகுத்தன. போலீசுக்கு எதிராக மக்கள் ஜீவமரண போராட்டம் நடத்தினர். அப்படியிருக்க எதுவுமே சரியாக நடக்கவில்லை எந்த போராட்டமும் நடக்கவில்லை என்ற விரக்தி தற்போது ஏன் ஏற்படுகிறது? ஏனெனில் இப்போராட்டங்கள் அனைத்தும் ஒரே குணாம்சத்தை கொண்டிருந்தன அதாவது அங்கொன்றும் இங்கொன்றுமாக தானாக திடீரென உருவெடுத்த போராட்டங்களாகவும் அவை இருந்தன. (Vol III Page 173, 74)

என்னுடைய கேள்வி இதுதான்: இதுதானா தலைமை என்பது? ஆனால் நாட்டில் இதுதான் திரும்பத்திரும்ப நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இதைத்தான் நான் மிகத்தெளிவான மிகச்சாதாரணமான வெட்டிப்பேச்சு தலைமை என்று கூறுகிறேன். அவர்களது நோக்கம் மக்களை பயிற்றுவிப்பதல்ல. மாறாக மக்களிடையே மலிவாக பிரபலமடைவதே யாகும். ஸ்தாபனத்தைப்பற்றி மக்களுக்கு போதித்து அவர்களுக்கு சித்தாந்தத்தை ஊட்டவேண்டிய அவசியமுள்ளது. இயக்கத்தைப்பற்றிய யுக்திகளான எவ்வாறு போராடுவது? எவ்வாறு முன்னேறுவது போராட்டத்தில் பின்வாங்குவது எப்படி? போன்றவைகளைப்பற்றி அவர்களுக்கு போதிக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் வெறும் உபதேசங்களாலும் உணர்ச்சிப்பெருக்குமிக்க பிரசங்கங்களாலும் மக்களை பொங்கியெழச் செய்து அவர்களிடையே மலிவாக பிரபலமடைந்து அவர்களின் கைதட்டல்களை பெற்றபின் போராட்டத்திலிருந்து விலகிக்கொள்கின்றனர். நமது தலைவர்களின் குணாம்சம் இதுதான். பிழைப்புக்காக பிரபலமடைந்து பதவியிலும் அந்தஸ்திலும் மேலே செல்லவேண்டும் என்ற எண்ணத்திலிருந்து தலைவர்கள் விடுபடவில்லையென்றால் பல்வேறு வகையான சந்தர்ப்பவாதத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளாமல் மக்களுடைய புரட்சிகர குணாம்சங்களையும் ஒழுக்க உணர்வையும் அரசியல் விழிப்புணர்வையும் தனித்தன்மையுடனும் தெளிவாகவும் முன்னெடுத்துச் செல்லமுடியாது. எனவே இயக்கத்தின் தலைமையை வலுப்படுத்துவதற்காக பல தலைவர்களின் குணாம்சங்களில் அப்பட்டமாகவும் நாளுக்குநாள் அதிகமாகவும் வெளிப்படுகின்ற சந்தர்ப்பவாத போக்குகளையும் பதவி அந்தஸ்து அதிகாரத்தை மேம்படுத்திக்கொள்கின்ற போக்கையும் கடுமையாக விமர்சிக்கவேண்டும். நான் இவ்வாறு நம்புகிறேன்.

நமது நாட்டில் இதுவரையில் இயக்கங்களுக்கு தலைமை வகித்த கட்சிகள் அனைத்தும் அடிப்படையில் தேர்தல் நோக்குகொண்ட கட்சிகளாகும். அவர்கள் தங்களுக்கே உரிய பாணியில் இயங்கும்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் போதனைகளிலிருந்து

## மக்கள் இயக்கங்களை சரியாக வழிநடத்துவது குறித்து

*3ம் பக்கம் தொடர்ச்சி*

போலி மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சிகளாயினும் இடதுசாரி அல்லது வலதுசாரி கம்யூனிஸ்ட் கொடியை ஏந்தியுள்ளோராயினும் இந்த வாதம் அந்த வாதம் என்று ஏதேனும் ஒரு வாதத்துக்கெதிராக போட்டியிடுவோராயினும் யாராக இருப்பினும் அவர்களது அடிப்படை ஒன்றுதான். அவையனைத்துமே தேர்தல் நோக்கு கொண்ட கட்சிகள்தான். (Vol IV P 66, 67)

கொடூரமான அடக்குமுறையால் துன்புறுவது மக்களே போலீஸ் துப்பாக்கிச்சூட்டில் மடிவது மக்களே இவற்றுக்கெதிராக கட்சிகள் பிரச்சாரம் செய்து தேர்தல் பிரசாரத்தில் ஆதாயமடைந்து தேர்தல்களில் வெற்றியீட்டி மாலை மரியாதைகள் பெற்று அமைச்சர்களாகவோ வேறு ஏதேனும் பெரிய பதவிகளிலோ அமர்கிறார்கள். இயக்கத்தைப்பற்றி பெரும்பாலான கட்சிகள் கொண்டிருக்கும் மனப்பான்மை இதுவேயாகும். (Vol III Page 168, 170)

அரசியல் விழிப்புணர்வுடன் இத்தகைய கிளர்ச்சி இயக்கங்களை நடத்தும் போக்கில் ஓரளவிற்கு மக்களின் அரசியல் விழிப்புணர்வையும் குறிப்பிடத்தக்க அளவிற்கு மக்களின் அரசியல் தலைமையையும் மக்கள் கமிட்டிகள் போராட்டக் கருவிகளாகவும் வளர்த்தெடுப்பதற்கு ஒரு உண்மையான புரட்சிகர கட்சி விரும்புகிறது. இத்தகைய மக்கள் கமிட்டிகள் நிரந்தரமான அமைப்புகளாக இருக்காது. குறிப்பிட்ட அளவு மக்களின் விழிப்புணர்வுடன் ஒவ்வொரு போராட்டத்தின் போதும் இக்கமிட்டிகள் வளரும் இயக்கம் முடிவிற்கு வந்தபின் இக்கமிட்டியும் இல்லாமற்போகும். இவ்வாறாக ஒவ்வொரு இயக்கத்தின்போதும் ஓரளவிற்கு புரட்சிகர விழிப்புணர்வுடன் மக்கள் கமிட்டிகள் வளருமானால் இயக்கங்களை தாங்களாகவே வழிநடத்துவதற்கும் புரட்சிகர தலைமையை வளர்த்தெடுப்பதற்கும் மக்கள் கற்றுக்கொள்வார்கள். இயக்கத்தில் மக்கள் இருக்கும்போது அவர்களுக்கு இல்லாமற்போகலாம். ஆனால் உக்கிரமான போராட்ட உணர்வும் போராட்டம் குறித்த தெளிவான கண்ணோட்டமும் கொண்டிருப்பர். தலைவர்களுக்குள் மிக எளிதாக நுழைகின்ற கட்சிக்குள் ஊடுருவுகின்ற தீயொழுக்கங்களுக்கு மக்கள் பலியாகிவிடமாட்டார்கள். இந்த உணர்ச்சிப்பெருக்கோடு அரசியல் விழிப்புணர்வையும் அனுபவத்தையும் அவர்கள் கைவரப்பெற்றால் எந்த அளவிற்கு இந்த இயக்கத்தை முன்னெடுத்துச்செல்ல முடியும்? எவ்வாறு அதை நடத்துவது என்பதை அவர்களாகவே தெரிந்துகொள்வார்கள். அவர்களால் இதை செய்யமுடியும்போது தங்களுக்கு தலைமை தாங்கும் கட்சிகளில் எவையெல்லாம் உண்மையிலேயே ஒழுக்க ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் தங்களை சரியாக வழிநடத்துகின்றன என்பதையும் தங்களது திட்டங்களுக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் நல்குகின்றன என்பதையும் அவர்கள் நன்றாகவே தெரிந்துகொள்ள இயலும். இந்த புரிந்துணர்தலை அவர்கள் அடையும்போது போலியான புரட்சிகர கட்சிகள் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவர். ஜனநாயக வெகுஜன இயக்கங்கள்பால் எமது கட்சி கொண்டுள்ள அணுகுமுறை இதுவேயாகும். (Vol. III page 168, 171)

ஒடுக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க மக்களுக்கு சரியான புரிந்துணர்வு இருக்கிறதோ இல்லையோ அவர்கள் இயக்கங்களில் வெடித்தெழுவர். ஆனால் சரியான அமைப்பு இல்லாததாலும் சரியான தலைமை இல்லாததாலும் நன்கு பகுப்பாய்வு செய்து புரிந்துகொள்வதற்கான பொறுமை அவர்களிடம் இல்லாததாலும் தன்னெழுச்சியான குணாம்சத்திலிருந்து இவ்வியக்கங்களை விடுவிக்க இயலாது. (Vol. III page 173, 174)

ஒவ்வொரு இயக்கத்திற்கு பிறகும் மக்களை விரக்தி அலை ஆட்கொள்கிறது. ஏனெனில் இவ்வியக்கத்திற்கு சரியான தலைமை வழங்கக்கூடிய கட்சிக்கு இயக்கங்களுக்கு தலைமைதாங்கவும் இவ்வியக்கங்களை கட்டுப்படுத்தவும் சரியான வழியில் அவற்றை வழிநடத்தவும் போதுமான பலம் தற்போது இல்லை. அக்கட்சியால் இவையெல்லாம் செய்ய முடியுமானால் சரியான யுக்தியைப்பற்றியும் போராட்டத்தின் இறுதி லட்சியத்தை பற்றியும் மக்களை பயிற்றுவித்து விரக்தியிலிருந்து அவர்களை விடுவித்து மக்களின் சொந்த போராட்டக்கருவிகளை வளர்த்தெடுப்பதன் மூலம் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிச புரட்சி என்ற இலக்கை நோக்கி படிப்படியாக உறுதியாக முன்னேற முடியும். (Vol. III page 173, 174)

இயக்கத்தின் அடிப்படை அரசியல் பாதை சரியாக இருக்கிறதா என்பதில் கவனம் செலுத்தவேண்டியது கட்டாயமான கடமையாகும். அதாவது முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிச புரட்சியின் போர்திட்டம் மற்றும் நடைமுறை உபாயங்களை கொண்டுள்ளதா என்பதில் கவனம் செலுத்தவேண்டும். இதுவன்னியில் இவ்வியக்கங்களின் சரியான தலைமையை அடையாளங்களை மக்களின் போராட்டக்கருவிகளான சோவியத்துக்களை ஒத்த விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் போராட்டக் கமிட்டிகளை கட்டுவதில் எந்த கட்சி அல்லது எந்த சக்திகள் உண்மையிலேயே ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்றன என்பதை கண்டறியவேண்டும். அதேபோல் ஏதேதோ காரணங்கள் கூறி இத்தகைய மக்கள் போராட்டக் கமிட்டிகளை அமைப்பதில் யாரெல்லாம் தடங்கல்கள் ஏற்படுத்துகிறார்கள் என்பதையும் கட்சியின் ஸ்தாபனபலம் அதிகரிப்பதையும் மக்கள் மீது கட்சிக்கு உள்ள பிடிமானத்தையும் மக்களின் அரசியல் அதிகாரம் என்று கூறி மக்களை தவறாக வழிநடத்துவது யார் என்றும் கண்டறிவதும் அவசியமாகும். இவ்வாறு கண்டறிவதன் மூலம்தான் இயக்கத்தில் சரியான தலைமையை அடையாளம் காணவியலும். இவையெல்லாவற்றும் கூடவே இயக்கத்தில் பங்கேற்றுள்ள பல்வேறு கட்சிகளில் எந்த கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் தங்களது அன்றாட அரசியல் போராட்டத்திலும் நடத்தையிலும் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிச புரட்சிக்கு உகந்த உயர்ந்த நீதிநெறி ஒழுக்கநெறி கலாச்சாரம் ஆகியவற்றை பிரதிபலிக்கிறார்கள் என்பதையும் மிகக்கவனமாக பார்க்கவேண்டும். தற்போதுள்ள சுரண்டல் முதலாளித்துவ அமைப்பு முறையை அகற்றி அதனிடத்தில் விஞ்ஞானபூர்வ சோசலிசத்தின் அடிப்படையில் சோசலிச சமூக அமைப்பு முறையை நிறுவவேண்டுமானால் வெகுஜன இயக்கங்கள் நடத்தும்போது மேற்கூறிய அம்சங்களில் நீங்கள் கவனம் செலுத்தவேண்டும். (Vol. III page 524, 525)

இன்றைய நாட்களில் பலமான கம்யூனிச எதிர்ப்புணர்வோடு இயங்கும் எந்தவொரு ஜனநாயக இயக்கமும் உண்மையிலேயே ஜனநாயகமானதாக இருக்காது என நமது கட்சி கருதுகிறது. ஒரு கட்சி மார்க்சிஸ்ட் கட்சியாக இல்லாமலிருக்கலாம். கம்யூனிஸ்ட் கட்சியாக இல்லாதிருக்கலாம். ஆனால் அக்கட்சி கம்யூனிஸ்ட் வெறுப்பாளராக இருக்குமானால் இன்றைய நாளில் அது உண்மையிலேயே ஜனநாயகக் கட்சியாக இருக்க முடியாது. ஏகாதிபத்திய எதிர்ப்பு இல்லாத எந்த கட்சியும் உண்மையிலேயே ஜனநாயகமானதாக இன்று இருக்கமுடியாது. எனவே ஐக்கிய முன்னணி அமைப்பதற்கு முன்வருகின்ற கட்சிகள் பொதுவில் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுடையதாகவும் குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுடையதாகவும் இருக்கவேண்டியதும் மார்க்சிசம்–லெனினிசம் கம்யூனிச கண்ணோட்டத்திற்கு குறைந்தபட்சம் அனுதாபம் கொண்டதாக இருக்கவேண்டியதும் அவசியமாகும். (Vol. III page 588, 89)

இன்றைய காலக்கட்டத்தில் மார்க்சிசத்திற்கு விரோதமாக இருந்துகொண்டு சமுதாயத்தில் யாராலும் ஒரு புரட்சிகரமான மாற்றம் கொண்டு முடியாது. ஏனெனில் இன்றைய காலக்கட்டத்தில் மார்க்சிசம் மட்டுமே விடுதலைக்கான பாதையை காட்டவல்லது. இதர சித்தாந்தங்கள் அனைத்தும் சித்தாந்த குழப்பங்களேயாகும். எனவே நாட்டில் மார்க்சிச இயக்கத்தில் ஏற்பட்டுள்ள கடும் திரிபுகளை பார்த்து இளைஞர்கள் மற்றும் மக்களின் ஒரு பகுதியினர் மார்க்சிசம்–லெனினிசத்திலிருந்து விலகச்சென்று காங்கிரஸ் பக்கம் சாய்ந்துவிட்ட மக்கள் மற்றும் இளைஞர் பிரிவினர் தவறாக புரிந்துகொண்டுள்ளனர். மார்க்சிசத்தை திரித்தவர்கள்தான் இதற்கு பொறுப்பாவார்களேயொழிய மார்க்சிச–லெனினிச சித்தாந்தம் இதற்கு பொறுப்பாகாது. இதைப்பற்றி சிந்திக்குமாறு அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய சூழ்நிலையில் மேலும் சிதைக்கப்படுவதிலிருந்து மார்க்சிசம்–லெனினிசத்தை விடுவிக்கவேண்டியது அவர்களது கடமையாகும். நான் கூறியவை குறித்து பரிசீலிக்குமாறு அவர்களை கேட்டுக்கொள்கிறேன். (Vol. IV page 57)

மார்க்சிசம்–லெனினிசம்தான் மிக உயர்ந்த லட்சியமாகும். இக்காலக்கட்டத்தின் மிக உயர்ந்த சித்தாந்தம் அதுவே. இக்காலக்கட்டத்தின் மிக உயர்ந்த மிகவும் முன்னேறிய ஒழுக்கம் மற்றும் நீதிநெறிக் கோட்பாடுகளை இந்த சித்தாந்தத்தில்தான் காண முடியும். இதைவிட உயர்ந்த சித்தாந்தம் வேறு எதுவும் கிடையாது. (Vol. IV page 601)

வெறுமனே புரட்சியை விரும்புவது மட்டும் புரட்சிகர விழிப்புணர்வின் வெளிப்பாடு ஆகிவிடாது. அதேபோல் உழைக்கும் வர்க்கத்தைப்பற்றி பாட்டாளிகளைப்பற்றி சிந்திப்பது மட்டுமே பாட்டாளி வர்க்க விழிப்புணர்வாகிவிடாது. சரியான புரட்சிகர உணர்வென்பது சரியான பாட்டாளிவர்க்க விழிப்புணர்வாகும். சரியான பாட்டாளி வர்க்க விழிப்புணர்வென்பது சரியான பாட்டாளிவர்க்க கட்சி விழிப்புணர்வாகும். இதன் பொருள் யாதெனில் உண்மையான புரட்சிகரக்கட்சியை உங்களால் அடையாளம் கண்டு அங்கீகரிக்க முடிகிறதா இல்லையா என்பதுதான். (Vol. III page 391)

… ஒரு புரட்சிகர கட்சியின் குணாம்சத்தை தீர்மானிப்பதற்கான அதிமுக்கியமான அளவுகோல் யாதெனில் நாட்டில் புரட்சியை நடத்துவதற்கு உகந்த வகையில் புதிய கண்ணோட்டம் ஒன்றை வளர்த்தெடுப்பதற்காக வாழ்வின் அனைத்து அம்சங்களையும் தழுவிய ஒருங்கிணைந்த அறிவின் அடிப்படையில் செயல்பாட்டுக்கான வழிகாட்டுதலை மக்கள் முன்பு முன்னிலைப்படுத்தி அத்தகைய வழிகாட்டுதலை வெகுஜன இயக்கங்கள் முன்பு நிறுத்துவதற்கு ஒரு கட்சியால் முடிந்திருக்கிறதா இல்லையா என்பதேயாகும். அதாவது சமுதாயத்தில் இன்னமும் நிலவுகின்ற பழைமைதட்டிப்போன மனப்பான்மையை விட்டொழிப்பதன் மூலம் பாட்டாளி வர்க்க புரட்சியின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்துக்கும் உகந்த உயர்ந்த புதிதான கலாச்சார நீதிநெறி தரத்தை முன்னிலைப்படுத்துவதற்கு ஒரு கட்சியால் முடிந்திருக்கிறதா இல்லையா என்பதுதான். இன்னும் குறிப்பாக சொல்வதானால் ஆரம்பகட்டமாக இந்த சித்தாந்த–கலாச்சார இயக்கத்தின் முன்னணிப்படையினராக விளங்கும் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிவின் அடிப்படையிலான இப்புதிய கலாச்சாரம் மற்றும் நீதிநெறி மதிப்புகளை தங்களது சொந்த வாழ்வில் கடைபிடிப்பதற்கான போராட்டத்தை துவக்கியுள்ளார்களா இல்லையா என்பதுதான் வேறு வார்த்தைகளில் சொல்வதானால் அரசியல் புரட்சியின் முன்னதாக கலாச்சாரப் புரட்சியை நடத்துவதற்கு அவர்கள் முனைப்போடு செயல்படுகிறார்களா இல்லையா என்பதாகும். அரசியல் பொருளாதார சமூக கலாச்சார திட்டங்களை ஒருங்கிணைக்காமல் எந்த நாட்டிலும் புரட்சியை வெற்றிகரமாக்க முடியாது என்பதை ஒவ்வொரு உண்மையான மார்க்சிஸ்ட்–லெனினிஸ்டும் அறிவார். எந்த காலத்திலும் எந்தவொரு மிக உயர்ந்த புரட்சிகர சித்தாந்தமாயினும் அதன் உயிருள்ள ஆன்மா அதன் சாராம்சம் அதன் உட்கரு ஆகியன அச்சித்தாந்தத்தின் உயர்ந்த கலாச்சார நீதிநெறித்தரத்தில்தான் உட்பொதிந்துள்ளது. இன்றைய கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தின் ஜீவாத்மா அல்லது உட்கருவை உட்கிரகித்து தன்னுள் இரண்டறக்கலந்திடச் செய்ய வேண்டும். முதலாளித்துவ புரட்சியின் காலக்கட்டத்தில் அப்புரட்சி அடைந்த மனிதநேய கலாச்சாரம் நீதிநெறி மதிப்புணர்வுகளின் அதிகபட்ச மட்டத்தைக்காட்டிலும் பாட்டாளி வர்க்க கலாச்சாரம் மிக உயர்ந்ததாகும். தேவையான உயர்ந்த கலாச்சார தரத்தை அடையாமல் அதாவது பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தரத்தை அடையாமல் புரட்சியின் கருத்தியலை சரிவர பாராட்டுவதற்கான திறனையோ அக்கருத்தியலை மெய்யுணர்வாக உணர்வோ ஒருவரால் முடியாது. இதனால்தான் வெகுஜனங்களின் புரட்சிகர போராட்டத்தில் லட்சக்கணக்கான மக்களை ஈடுபடுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த வாழ்க்கைக்கே புரட்சிகர திசைப்போக்கை கொண்டு வருவது என்பதைத்தான் புரட்சிகர அரசியலை சரியாக பிரயோகித்தல் அல்லது சரிவர செயல்படுத்துதல் என்பதன் பொருள் என்று கூறுகிறோம். மார்க்சிசம்–லெனினிசத்தை உண்மையிலேயே கற்க விரும்புவோர் மார்க்சிசம்–லெனினிச கோட்பாடுகளை பின்பற்றி இப்போராட்டத்தை தங்களது சொந்த வாழ்வில் நடத்த முயலுவோர் அல்லது அப்போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திவிட்டு தொடர்ந்து அப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரிடமிருந்து மட்டுமே கற்கவேண்டும். தங்களது சொந்த வாழ்வில் வெளிப்படுத்தும் நடத்தைகளிலும் நடவடிக்கைகளிலும் ரசனைகளிலும் பழக்கவழக்கங்களிலும் இழிவான முதலாளித்துவ கலாச்சாரத்திற்கு பலியானோராக இன்னமும் இருப்பவர்களிடமிருந்து மார்க்சிசம்–லெனினிசத்தை கற்காதீர்கள். ஏனென்றால் மார்க்சிசம்–லெனினிசம் என்ற பெயரில் அவர்கள் கற்றுத் தருவது தவறானதாகவே இருக்கும். (Vol. II page 249, 59, 267)

*குறிப்பு : தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் தேர்வு நூலில் (ஆங்கிலம்) இருந்து எடுக்கப்பட்டது.*

## ஆணவத்தின் உச்சம்!

# குஜராத் இனப்படுகொலையை நியாயப்படுத்தும் நரேந்திர மோடி

*ராய்ட்ஸ் செய்தி நிறுவனத்துடனான நரேந்திர மோடியின் நேர்காணல் மற்றும் பிற இடங்களில் அவர் பேசிய பேச்சுக்களில் அவர் குறிப்பிட்டுக் காட்டிய உதாரணங்களையும், கருத்துகளை வெளிப்படுத்திய தொனியையும் ஒட்டுமொத்தமாக அனைவரும் கண்டித்திருப்பதோடு கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்விஷயத்தைக் கண்டும் காணாமல் விட்டுவிட முடியாது ஆகையால் இது ஒரு ஆழ்ந்த விவாதத்தை கோருகிறது.*

இந்திய அரசியலுக்கு நரேந்திர மோடி எவ்வாறெல்லாம் பங்களிப்புகளைச் செய்திருக்கிறார் என்ற விஷயத்திலிருந்து விவாதத்தைத் துவங்குவோம். மோடி 2002ல் குஜராத் முதல்வராக இருந்தபோது இஸ்லாமிய சிறுபான்மை மக்களுக்கு எதிராக ஒரு இனப்படுகொலையை வடிவமைத்து, கண்காணித்து, வெற்றிகரமாகச் அவர் செயல்படுத்தினார் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. இந்த இனப்படுகொலை மிகக் கொடூரமானது என்பது மட்டுமல்ல இது அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட ஒன்று. இந்த இனப்படுகொலையில் கண்மூடித்தனமான கொலைகள், பாலியல் வன்முறைகள், தீவைப்பு சம்பவங்கள், கொள்ளையடித்தல் மற்றும் சொத்துக்களை சூறையாடல், உயிர்பிச்சை கேட்கும் மக்களை கூட உயிரோடு கொளுத்துதல் என்று அனைத்தும் நடந்தன.

கோத்ரா இரயில் எரிப்பு சம்பவத்திற்கு எது காரணம் என்பது குறித்து அதுவரையில் அறிந்திராத அதுபற்றிய சர்ச்சைகள் நடந்து கொண்டிருக்கிறது. இனப்படுகொலை துவங்குவதற்கு முதல்நாள் பிப்ரவரி 27 அன்று மோடி ஒரு உயர்மட்ட அரசு அதிகாரிகள் கூட்டத்தில் முஸ்லீம்களுக்கு பாடம் கற்பிக்க விரும்புதாகத் தெரிவித்தார். மேலும் கோத்ரா சம்பவத்தின் எதிரொலியாக இந்துக்கள் திருப்பியடிக்கும் காரியத்தில் இறங்கும் வேளையில் இந்துக்களிடம் கடுமையாக நடந்து கொள்ளவேண்டாம் என்று காவல் துறையைக் கேட்டுக்கொண்டார். போலீஸ் கட்டுப்பாட்டு அறையில் தனக்குச் சாதகமானவர்களை நியமித்தார். அனைத்து மொபைல் அழைப்புகள் ஆவணங்கள், கூட்டங்கள் இன்ன பிறவற்றின் அழித்தார். தனக்கு சாதகமாக நீதிமன்ற பணியாளர்களையும், அரசு, அரசுசாரா வழக்கறிஞர்களையும், மற்றும் பலரையும் பல தில்லுமுல்லு வேலைகளை நீக்கவும் பணியில் அமர்த்தவும் செய்தார்.

இவையனைத்தும் பட்டப்பகலில் நடந்து முடிந்தன எங்குபார்த்தாலும் மோடியின் சுட்டவுட்கள். அரசு நடத்திய வழக்கு விசாரணை என்ற நாடகங்களில் அப்பாவிகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களும் நீதி வழங்கப்படவில்லை மாறாக நடந்த வழக்கு விசாரணைகள் கொலைகாரர்களை குற்றமற்றவர்கள் என்று அறிவித்தது. பாதிப்புற்று மரண பயத்தில் இருந்தவர்கள் நிவாரணமுகாம் என்ற பெயரில் அடிப்படை வசதிகளற்ற குடியிருப்புகளில் அடைக்கப்பட்டனர். அவ்வாறு அடைக்கப்பட்டவர்கள் தங்களுக்கான நாகரீகமான இருப்பிடம், வேலை, கல்வி தங்களுக்கான அடையாளம், அடிப்படை வசதிகள் யாவுமின்றி முடங்கிக் கிடந்தனர். தங்களுக்கு நியாயம் கிடைக்காமலும் தாங்கள் பார்த்தவற்றை சாட்சியம் சொல்ல முடியாமல் பயத்திலும் இருந்தனர். மேலும் இந்தக் கொடுமைகளைக் கண்ணால் கண்ட சாட்சிகள் யாரெல்லாம் துணிவோடு அதனை வெளியில் சொல்ல முன் வந்தார்களோ அனைவரும் மிரட்டப்பட்டனர். அடித்து உதைக்கப்பட்டனர். பணம்கொடுத்து விலைக்கு வாங்கப்பட்டனர். ஆனால் இதற்கு நேர்மாறாக கொடுமை புரிந்த குற்றவாளிகள் வெளியில் சுதந்திரமாக விடப்பட்டனர்.

பிப்ரவரி 27ம் தேதி உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் என்னவெல்லாம் பேசப்பட்டதோ அவை அனைத்தும் எவ்வாறு மறுநாளே கணகச்சிதமாக நடந்தது என்று வெளியில் சொல்ல முன்வந்த பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், விமர்சகர்கள், அனைவரும் வாயடைக்கப்பட்டனர். அடித்து உதைக்கப்பட்டனர். தீர்த்துக்கட்டப்பட்டனர். ஹரேன்பாண்ட்யா என்ற மந்திரி மிக மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டார். சஞ்சீவ் பட் என்ற உளவுத்துறை அதிகாரி பதவியிறக்கம் செய்யப்பட்டார். பின்பு கைதுசெய்யப்பட்டார். ஆனால் வாயை மூடிக்கொண்டு எதையும் வெளியில் சொல்லாமலிருந்த அனைவருக்கும் வெகுமதிகள் வழங்கப்பட்டன. இன்னும் சில வழக்குகளை வெளி மாநிலங்களுக்கு மாற்றவேண்டிய அளவிற்கு நிலைமை மோசமடைந்தது. இருப்பினும் வழக்கு விசாரணையில் எந்த மாற்றமும் இல்லை. இவையனைத்தும் பி.ஜே.பி யின் தத்துவார்த்த ஸ்தாபனங்களாகிய ஆர்.எஸ்.எஸ், சங்கப்பரிவாரங்களின் விருப்பத்திற்கேற்பவே நடந்தன என்பதை அனைவரும் அறிவர். எல்லாவற்றிற்கும் மேலாக அன்று உள்துறை அமைச்சராக இருந்த பி.ஜே.பி யின் மிகமூத்த தலைவர் அத்வானியிடமிருந்து மோடி சம்மதத்தைப் பெற்றுறிருந்தார். அன்று முன் மாதிரி பிரதமர் என்றும் எல்லா உன்னத மனித குணங்களையும் பெற்றவர் என்றும் பூர்ஷுவா ஊடகங்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட அடல்பிஹாரி வாஜ்பாய்கூட 45 நாட்கள் நடந்த இந்த இனப்படுகொலை குறித்து வாய்திறக்கவில்லை. உடைமை இழப்பு, எல்லாவற்றிற்கும் மேலாக ஏழையினும் ஏழையாக இருந்த அடித்தட்டு மக்கள் நிறைந்த ஒரு சமூகத்தவரின் மீது கொலைவெறி தாண்டவம், அவநம்பிக்கை, வெறுப்பு, ஆகியவற்றைத் தூண்டிவிட்டு மிக அருவருக்கத்தக்க சூழலை ஏற்படுத்தி பாதிக்கப்பட்டவர்கள் மரணபயத்தோடும், பாதுகாப்பற்ற சூழ்நிலையிலும் விடப்பட்டனர். மேலும் அரசாங்கம் மற்றும் நிர்வாகத்தின் மீது முழுவதுமாக அவர்கள் நம்பிக்கையிழந்தனர்.

### மக்களின் கருத்தே உச்சநீதிமன்றத்தை சிறப்புப் புலனாய்வுக்குழுவை (எஸ் ஐ டி) நியமிக்கும்படி நிர்ப்பந்தித்தது

ஆர்.எஸ்.எஸ் மோடியை செல்லப்பிள்ளை என்று கொண்டாடியபோதும், ஆளும் வர்க்கம் அவர் பின்னால் துணைநின்றபோதும் மற்றும் காங்கிரஸ் மறைமுகமாக அவருக்கு ஆதரவான அரசியல் போக்கை கைக்கொண்டபோதும் நாட்டின் உள்ளும் வெளியிலும் மதச்சார்பற்ற நல்லெண்ணம் கொண்ட மக்களின் ஒருமித்த கருத்தின் அழுத்தம் தொடர்ந்து அதிகரித்து வளர்ந்ததன் காரணமாக இனப்படுகொலையில் நடந்த குற்றங்களை மூடிமறைக்க அவர்கள் எடுத்த முயற்சி தோல்வியுற்றது, வேறு வழியின்றி உச்சநீதிமன்றம் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி) ஐ 2009ல் நியமித்தது. நீண்ட 7 ஆண்டுகாலம் என்பது சாட்சிகளை அழிப்பதற்கும் நீர்த்துப்போகச் செய்வதற்கும் போதுமானதாகவே இருந்தது. இருப்பினும் சிறப்புப் புலனாய்வுக்குழு 12 மே 2010ல் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. ஆனால் உச்சநீதிமன்றம் அதனை மேஜைக்கு அடியில் போட்டுவிட்டது. ஆனால் எவ்வாறாயினும் ஒரு துப்பறிதலின் மூலமாக உண்மை வெளிவந்துவிட்டது. இந்த சிறப்புப் புலனாய்வுக்குழு அறிக்கை மிக அழுத்தமாக மோடியின் மீது குற்றம்சாட்டியதாக காட்டியுள்ளது. அதாவது மோடி, ஒரு மாநிலத்தின் முதல்வர் என்ற முறையில் வகுப்புவாத அரசியல் திட்டத்தை உயர்த்திப்பிடித்து முஸ்லீம் இன மக்களுக்கு எதிராக 'பொறுப்பற்ற' வெறியூட்டும் பேச்சுக்களைப் பேசியிருக்கிறார் என்றும் மேலும் பல்வேறு சாட்சிகளையும் ஆவணங்களையும் அழித்திருக்கிறார் என்றும் அவ்வறிக்கை குற்றம்சாட்டியது. ஆனால் இதுவரையில் இது குறித்து ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அனைவரும் எந்தச் சலனமுமின்றி அசையாமல் இருந்துவருகிறார்கள். சமீப காலத்தின் மிகக் கொடூரமான ஒரு இனப்படுகொலையைத் தூண்டிவிட்டு நடத்திய குற்றத்திற்காகத் தண்டிக்கப்படவேண்டிய ஒரு மனிதனை உயர்ந்த மனிதனென்று புகழ்பாடித்திரிந்தார்கள். ஒன்றுக்குப்பின் ஒன்றாக மூன்று குஜராத் சட்டமன்றத் தேர்தல்களிலும் (2002, 2007, 2012) அவர் 'வெற்றி பெற்றார்' இந்த வெற்றிகள் அனைத்தும் மிகுந்த வகுப்புவாத வெறியூட்டப்பட்டே பெறப்பட்டன. எதிர்காலமற்ற, வீடிழந்து, தனது சொத்துக்களை இழந்து கடந்த பத்தாண்டுகளாக அல்லல்பட்டுவரும் சிறுபான்மை இனமக்கள் இத்தேர்தல்களில் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. எப்படியோ மோடியை ஊதிப் பெரிதாக்குவதற்கும், அவரை 'சூப்பர் மேன்' ஆக்குவதற்குமான முயற்சி திட்டமிடப்பட்ட வகையில் தொடர்ந்து நடந்து வருகிறது. ஜெர்மனியின் கொடூரமான நாஜி ஆட்சியின் கொடுஞ்செயலை நினைவுபடுத்தும் குற்றங்களை திட்டமிட்டு நடத்திய ஒருவர், தனது மாநிலத்தில் இன்னமும் அந்த பாசிச பிடியைத் தொடர்ந்து இறுக்கிவரும் அவர், தான் பெற்ற வெற்றி எத்தகையது என்றில்லாமல் மக்கள் ஆதரவு தமக்கு இருப்பதாக பீற்றிக்கொள்கிறார்.

குற்றங்கள் திட்டமிடப்பட்டவகையில் நடத்தப்பட்டன. ஆனால் திட்டமிட்டவர்களும் செயல்படுத்தியவர்களும் தண்டிக்கப்படாமல் விடப்பட்டனர். மக்களின் நிர்ப்பந்தத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் நீர்த்துப்போகும்படி செய்யப்பட்டன, இழுத்தடிக்கப்பட்டன. இறுதியாக ஒன்றுமில்லாததாக்கப்பட்டன. அம்மாதிரியான சூழ்நிலையில் 2012ன் துவக்கத்தில் மோடியை மற்றவர்களையும் மீதும் நீதி விசாரணைக்கான இது ஆதாரங்கள் இல்லை எனக்கூறி விடுப்பதாக எஸ்ஐடி அறிவித்தது. ஆனால் அவ்வாறு அவர்கள் செய்த குற்றத்திற்கான சாட்சியங்கள் மிகத் தெள்ளத் தெளிவாக அனைவரும் அறிந்த ஒன்றாக இருந்தும் அவைகளை ஆதாரமாகக் கொண்டு அவர்களை நீதி விசாரணையின் முன் என்பதுதான் சட்டத்தின் வாதமாக இருக்கின்றது என்று மக்களால் நம்ப வைக்கப்பட்டது. இதற்கு முன்னர் வழக்கு போன்ற பல வழக்குகளில் உண்மை மறைக்கப்பட்டதைப் போலவே இறுதியாக உண்மை மறைக்கப்பட்டது. ஆனால் சில உண்மைகள் சரியாகச் சிந்திக்கும் மக்களின் மனங்களை ஆட்டிப்படைத்தது.

2012 குஜராத் சட்டமன்ற தேர்தல் நடக்க விருந்த நேரத்தில் மோடியை குற்றமற்றவர் என்ற தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. மோடி தன்னை குற்றமற்றவர் என்று இதுவரையில் சொல்லிவந்ததைப் போல தற்போதும் சொல்லிக்கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. ஆளும் வர்க்கத்தின் அங்கமான உச்சநீதி மன்றத்தினால் அமைக்கப்பட்ட இந்த எஸ்ஐடி, இந்த வழக்கில் இதுபோன்ற ஒரு முடிவை ஆளும் வர்க்கத்தின் ஒப்புதலை மற்றும் அதன் அரசியல் மேனேஜர்களான காங்கிரஸ் தலைமையிலான மத்தியஅரசாங்கத்திடம் அதுவும் அதன் தலைமையிலான அரசாங்கம் 2ஜி உள்ளிட்ட பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து சந்தித்து ஒட்டுமொத்தமாக மதிப்பிழந்து பெரும் குழப்பத்தைச் சந்தித்து வந்த அந்த நேரத்தில் இது குறித்த வழிகாட்டுதலைப் பெறாமலா அறிவித்திருக்கமுடியும்? இந்தச் சூழலின் பின்னணியில் பிஜேபி மற்றும் காங்கிரஸ் தலைவர்களுக்கிடையே நடந்த கூட்டத்தில் என்ன விஷயங்கள் பறிமாறிக் கொள்ளப்பட்டன? மேலும் இந்த விஷயம் குறித்து பேரம் முடிந்துவிட்டதாக ஊடகங்கள் மிகக் காரசாரமாக விவாதித்தன. குற்றம் சாட்டின? ஒரு வேளை இது உண்மையில்லையெனில் அதற்குப் பின்பிருந்து பிஜேபி பாராளுமன்றத்தில் காங்கிரஸின் ஊழல் குறித்தும் ஊழல் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் மிக அக்கறையோடு மூக்கை நுழைக்காமல் ஏன் விலகி நிற்கிறது? காங்கிரஸும் கூட மோடி புண்ணியவான் என்று கூறப்படுவது குறித்து கொஞ்சமும் வாய்திறக்க வில்லையே ஏன்?

### குஜராத் : வளர்ச்சியைப்பற்றி மோடி கூவிக் கொண்டிருக்க... மனிதவளர்ச்சிக் குறியீட்டில் கீழே போய்க்கொண்டிருக்கிறது

முதலாளித்துவ ஆளும் வர்க்கம் மற்றும் தனது கட்சியான பி.ஜே.பி மற்றும் ஆர்.எஸ்.எஸ ஸின் முழு பின்புலத்தோடும் காங்கிரஸிடமிருந்து மறைமுகமான ஆதரவினையும் பெற்று குற்றங்களை மூடிமறைக்க என்னதான் முயற்சிசெய்த போதிலும், 2002 இனப்படுகொலைக்கான கண்டனக் குரல் நாட்டிற்குள்ளும் வெளியிலும் குறைந்துவிடவில்லை. இவ்விஷயத்தில் மேலும் சில நாடுகள் மோடிக்கு விசா வழங்க மறுக்கும் நிலைக்குச் சென்றன. ஆனால் மோடியோ தனது வகுப்புவாத திட்டத்தை சுருட்டிவைக்காமலே 'வளர்ச்சி' என்ற கொடுமேளத்தை முழங்கிக்கொண்டிருந்தார். அவரது 'உலகமயமான' 'வளர்ச்சியில் அதிரும்' குஜராத் சுறுசுறுப்பான ஒளிமயமான நகரங்களாலும், மின்னும் தேசிய நெடுஞ்சாலைகளாலும், பரபரப்பான வியாபார மையங்களாலும் பணக்கார, மேல்நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சியினாலும் மின்னத்துவங்கியது. ஆனால், அதே நேரத்தில் குஜராத் மனித வளர்ச்சிக் குறியீட்டுப் பட்டியலில் (2011) நாட்டில் 11வது இடத்திலிருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் 37,248 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். 5 வயதுக் குட்பட்ட கிட்டத்தட்ட 45% குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் இருக்கின்றனர். பெண் குழந்தைகள் மற்றும் கருவுற்ற தாய்மார்கள் இறப்பு மற்ற மாநிலங்களைவிட மிக அதிக அளவில் இருந்து வருவதுடன் தேசிய சராசரி அளவைவிட கூடுதலாக இருந்துவருகிறது. மொத்தம் 19 மாவட்டங்களில் 14 மாவட்டங்களில் மிகத்தீவிரமான நிலத்தடி நீர் பற்றாக்குறை இருந்துவருகிறது. 2012ல் 7 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் சுகாதாரமற்ற தண்ணீ

தொடர்ச்சி 6ம் பக்கம்

# மதச்சார்பின்மை கோட்பாடுகளை மிதித்து எள்ளி நகையாடுகிறார் மோடி

5ம் பக்கம் தொடர்ச்சி

ரினால் பரவும் நோயினால் பாதிப்புற்றதாக பதிவாகி யிருக்கிறது. முக்கிய நகரங்களில் பணக்கார மற்றும் வசதி படைத்தோருக்கு நவீன மருத்துவமனைகள் இருக்க கிராமப்புற மற்றும் புறநகர் பகுதி மக்களுக்கு முறையான சுகாதார, மருத்துவ வசதிகள் மறுக்கப்படு கின்றன. பாடப்புத்தகங்கள் மற்றும் கல்வியின் விலை நாளுக்குநாள் அதிக அளவில் மாநிலம் முழுவதும் உயர்ந்துவருகிறது. பள்ளியிலிருந்து இடைநிற்றல் மிகஅதிக எண்ணிக்கையில் அதிகரித்து வருகிறது. குற்றங்களின் எண்ணிக்கை அதிகஅளவில் உயர்ந்து வருகிறது. ஒட்டுமொத்த போலீஸ் நிர்வாகமும், வகுப்புவாதத்திலும் ஜாதிய மற்றும் ஊழல் சேற்றுக் குள்ளும் மூழ்கடிக்கப்பட்டுவிட்டது. மனித உரிமை மீறல்கள், காவல்நிலைய மரணங்கள், உரிமைப் போராளிகள் மீது ஒடுக்குமுறைகள் மற்றும் சித்திர வதைகள், ஏழைப் பொதுமக்கள் மீது போலீஸின் அடக்குமுறைகள், போலி என்கவுன்டர்கள் அதிகரித்துவருகின்றன. அமைப்புசாராத் துறை களான விசைத்தறி நெசவு, செயற்கை வைரம் பட்டை தீட்டுதல், துறைமுக சரக்கு ஏற்றுமதி, உப்பளங்கள் மற்றும் கடல்சார் உணவு உற்பத்தி ஆகிய இன்னபிற துறைகளில் தொழிலாளர்கள் மனிதனிலும் கீழான நிலையில் குறைந்தபட்சக் கூலி சட்டம் இன்றி, சுகா தாரமற்ற நிலையில், வேலையில் நியமிக்கப்பட்ட தற்கான எந்த ஆதாரமுமின்றி உழைப்பில் ஈடுபட கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள்.

இவ்வாறான ஏற்றதாழ்வான வளர்ச்சி வெகு ஜனங்களின் மீதான முதலாளித்துவத்தின் ஈவிரக்கமற்ற சுரண்டலை மிகத் தீவிரப்படுத்து கிறது. இது இயற்கையாகவே மக்களிடத்தில் மிகுந்த அதிருப்தியையும் கோபத்தையும் ஏற்படுத்துகிறது. ஆனால் மோடி தனது மூர்க்கத்தனமான வகுப்பு வாத திட்டத்தை முன்நிறுத்தி அப்போராட்டங் களையும் எதிர்ப்புகளையும் ஒடுக்கி திசைதிருப்பி வருகிறார். இந்த ஏகபோக ஆதரவு, பணக்காரர்களின் வளர்ச்சிக்கான ஆதரவு, தீவிர தொழிலாளர் விரோத, போராட்ட இயக்கவிரோத மோடி அரசாங்கத்தின் நிலைபாடு மற்றும் பிரதான வகுப்புவாத சக்தி களின் ஊடுருவலால் ஏற்பட்ட மக்களின் ஒற்றுமை யின்மை ஆகியவை உள்நாட்டு மற்றும் அந்நிய ஏக போகங்கள் தங்களது லாப வேட்டையில் மட்டுமே கவனம் செலுத்தும் வசதியை ஏற்படுத்தியிருக் கின்றது. மேலும் குஜராத்தில், இந்திய ஏகபோகங்கள் மற்றும் தொழிற்துறையினர் சந்திப்பிற்கான மாநாட்டின் மூலம் ஒரு சரியான மேடையை அவர் களுக்கு அமைத்துக் கொடுத்து மனநிறந்து தன்னைப் பற்றி இவ்வுலகத்திற்கு பறைசாற்ற மோடி சந்தர்ப் பத்தினை வழங்கினார். அங்கே ஏகபோகவாதிகள் மற்றும் யு.எஸ், யு.கே. ஜப்பான் மற்றும் சீனாவி லிருந்து வந்த அவர்களின் ஏஜெண்டுகள் மோடியை வானளாவப்புகழ்ந்தார்கள். இந்திய கார்ப்பொரேட் முதலைகளுள் ஒருவரான முகேஷ் அம்பானி 'தொலைநோக்குகொண்ட' 'செயல்திறன்மிக்க' 'புத்துணர்வுகொண்ட' என்று வானளாவப் புகழ்ந்தார். அனில் அம்பானி, காந்திக்குப்பிறகு குஜராத் கண்டெடுத்த சிறந்த தலைவர், பிற மாநிலங்கள் உதாரணமாகக் கொள்ளவேண்டிய தலைவர் என்றார். ரத்தன் டாடா அவர்கள் மோடியை 'உதாரணபுருஷர்' என்றார். லஷ்மி மிட்டல், பிரதமராவதற்கான தகுதிக்குரிய ஏதோ அபூர்வ வஸ்து மோடியிடம் இருப்பதைக் கண்டுபிடித்தார். ஆகவே நாட்டுக்காக ஒரு புதிய பிரதமர் அன்றே அடையாளமிடப்பட்டு கண் காட்சிப் பேழையில் வைக்கப்பட்டார். ஆர்.எஸ்.எஸ்ஸின் ஆசிர்வாதம் மற்றும் பின்புலத் தோடு மிகக்குறிப்பாக ஆளும் வர்க்கம் மற்றும் காங்கிரசின் மறைமுக ஆதரவோடு, 2002 குஜராத் இனப்படுகொலையைத் திட்டமிட்டு நடத்தியவர் என்று அவர்மீதிருந்த குற்றச்சாட்டு துடைத் தெரியப்பட்டு உத்தமர் பட்டம் பெற்றார்.

முஸ்லீம் எதிர்ப்பு அடிப்படைவாதம் மற்றும் இந்துத்துவ பதாகையை உயர்த்திப்பிடித்து பெரும் பான்மை வாக்கு வங்கியை உறுதிப்படுத்திக்கொள்ள தயாரிப்புகள் மிக வேகமாக நடந்துவருகின்றன ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று சொல்லப் படும் ஊடகத்துறை ஜனநாயகத்தைக் கட்டிக்காக்கும் வேலையைச் செய்யவேண்டும். ஆனால், அதுவும் இந்த வகுப்புவாதச் சேற்றுக்குள் மூழ்கி மோடியை பிரதமராக முன்நிறுத்தும் பிரச்சினை சம்பந்தமான மலிவான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தங்களது வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாக செயல்படும் அதே நேரத்தில் இதற்குப் பின்னால் மறைந்திருக்கின்ற மோடி என்ற அரக்கத்தனமான, இரக்கமற்ற, வகுப்புவாத தலைவரை கொடுங் குற்றத்திலிருந்து மறைக்கும் மிகக் கேவலமான அரசியல் விளையாட்டுக்கு ஒப்புதல் தரும் வேலையைச் செய்கிறது. மோடிக்கு வக்காலத்து வாங்குபவர்கள் கூறும் – 'அவர் ஒரு மிதவாதி' மிகவும் மதச்சார்பற்ற வழியில் செல்லக்கூடியவர்' என்ற வாதங்களையெல்லாம் பொய்யாக்கிவிட்டு தன் உண்மையான முகத்திற்கு அணிவிக்கப்பட்ட பல்வேறு செயற்கையான முகமூடிகளையெல்லாம் கிழித்தெறிந்துவிட்டு அவர் புதுவேகத்துடன் ஆணவத்துடன் திரும்பவும் கிளம்பிவிட்டார். இது போல பல காரணிகளால் மோடி முன்னிறுத்தப் படுகிறார்.

## காட்டுமிராண்டித்தனமாக தந்திரமுகம் மீண்டும் வெளித்தெரிகின்றது

ஜூலை 12, 2013 ராய்டர்ஸ் பத்திரிகைக்கு அவர் அளித்த நேர்காணலில், 2002ல் 'நீங்கள் அனைத்தையும் சரியாகவே செய்வதாக நினைத் தீர்களா?' என்று கேட்கப்பட்ட கேள்விக்கு.... அவர் எவ்வித சலனமுமின்றி பதிலளிக்கிறார்: "நிச்சய மாக" என்று. இதன் மூலம் அவர் தான் எந்தத் தவறும் செய்யவில்லையென்றும் அனைத்தையும் சரியாகவே செய்ததாகவும் சொல்கிறார். அவ்வாறு கூறுவதில் அவருக்கு எந்த 'குற்றஉணர்வும்' இல்லை அதிகாரத்திலிருந்து கொண்டு மனிதவரலாற்றில் மிகக்கொடூரமான அருவருக்கத்தக்க, மனசாட்சியுள்ள நம் நாட்டு மக்கள் மட்டுமல்ல வெளிதேசத்தவரும் கண்டித்த ஒரு செயலை, வடிவமைத்துக் கண் காணித்து வெற்றிகரமாக செயல்படுத்திய அவர் தனது நெஞ்சை நிமிர்த்தி அனைத்தையும் சரியாகவே செய்தேன் நான் செய்தன எவையும் தவறில்லை என்று தன் பெருவிரலை உயர்த்திக்காட்டி இப்படிப் பட்ட கடந்தகால தனது சாதனைகளின் மூலம் நாட்டின் உயர்நிர்வாகப் பதவியைக் கைப்பற்ற விரும்புவதாக சொல்ல அவருக்கு எத்தகைய திமிர் இருக்கவேண்டும்! மேலும் இத்தகைய திமிரான பேச்சு ஊடகங்களில் திரும்பத் திரும்ப காட்டப் படுகிறது. ஆனாலும் கூட யாரும் இது குறித்து கேள்வியெழுப்பவில்லை. மேலும் குதூகலமடைந்த மோடி எஸ்ஐடி அறிக்கையே என்மீது எந்தத் தவறும் இல்லை என்று சொல்லிவிட்டது என்று சுட்டிக் காட்டி தான் உத்தமன் என்பதை நிரூபிக்கப்பார்க் கிறார். உயர்மட்ட அரசியல் பேரத்தின் மூலமாக எப்படி எஸ்.ஐ.டி அறிக்கையில் முன்பு குறிப்பிடப் பட்டிருந்த விஷயங்களுக்கு நேர்மாறான கருத்துக்கள் மோடிக்கு ஆதரவான வகையில் தில்லுமுல்லு செய்யப்பட்டு மாற்றப்பட்டன என்பதைப் புரிந்து கொள்ளமுடியாத அளவிற்கு நாட்டிலிருப்பவர்கள் ஊமைகளாகவும் செவிடர்களாகவும் இருப்பதாக அவர் எண்ணுகிறாரா? அப்பாவி மக்கள் உயிரோடு எரிக்கப்பட்ட, ஓட ஓட விரட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்தையெல்லாம் தொலைக்காட்சி வழியாக நேரடியாகப் பார்த்த மக்கள், அவை அனைத்தையும் ஏற்கனவே முழுவதும் மறந்துவிட்டார்கள் என்று இவர் எப்படி எண்ணுகிறார்? மேலும் அவர் அந்த நேர்காணலில் "அதிகாரத்தை அடைவதற்காக செருக்கோடு தேரில் நான் பவனி வருகிறபோது என் தேர்ச் சக்கரத்தில் ஏதேனும் 'குத்தே கா பச்சா' (நாய்க்கு பிறந்தது) அடிபட்டால் நிச்சயம் நான் வருத்தப்படுவேன்" என்று சொன்னார். தன் தேர்க் காலில் அடிபட்ட நாய்க்குட்டி என்று முஸ்லீம்கள் அல்லாத வேறு யாரையுமா அவர் குறிப்பிட்டார்? இல்லை. மேலும் இந்தியாவில் "குத்தே கா பச்சா" என்ற மிகவும் இகழ்ச்சிக்குரிய சொல்வழக்கு யாருடன் சம்பந்தப்படுத்திச் சொல்லப்படுகிறது என்பதை அனைவரும் அறிவர். தனது கலாச் சாரத்திற்குப் பொருத்தமான வார்த்தையைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து உபயோகப்படுத்தியதன் மூலம் தான் எப்படிப்பட்ட பண்பாளன் என்பதையும் அவர் வெளிப்படுத்திவிட்டார். ஆனால் தற்போது மோடி இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டவராக தோற்றமளிக்கிறார். மற்றும் தற்காப்புக்காக இப்படிப்பட்ட வார்த்தையைத் தேர்ந்தெடுத் திருக்கிறார். இது முஸ்லீம்களுக்கு எதிரான வெறித் தனமான ஆர்.எஸ்.எஸ் ஸின் ஒப்பீட்டுவாதம், தொனி இவற்றிலிருந்து அவர்பெற்ற கலாச்சார அறநெறித்தரத்தைத்தான் பிரதிபலிக்கிறது.

மோடியின் பிரதாபம் இதோடு முடிந்துவிட வில்லை. இன்னும் வரவிருக்கிறது. ஜனநாயகம், மதச்சார்பின்மை என்ற இரண்டு மிகமுக்கியமான சித்தாந்தக் கூறுகளின் அடித்தளத்தில்தான் இந்திய சுதந்திரப்போராட்டம் வளர்ந்தது என்பதை இந் நாட்டு மக்கள் நன்கறிவர். அது பல பலவீனங்களை குறிப்பாக கலாச்சாரத்துறையில் மக்களை ஒரு ஒட்டுமொத்த இந்திய தேசத்தின் மக்களாக ஒன்று படுத்துவதில் போதிய சமூகக் கடமையினைச் செய்யத்தவறியபோதும், இந்திய சுதந்திரத்திற்கான போராட்டம் இந்திய தேசியவாதக் கருத்தின் தாக்கத்தினால் உத்வேகம்பெற்று பல்வேறு ஜாதி, மத, இன, மொழி, மாகாணம் என வேறுபாடு கொண்ட மக்களை அப்பிரிவினையிலிருந்து வென் றெடுத்து லட்சக்கணக்கான மக்களை அப்போராட் டத்தில் ஈடுபடுத்தியது. மக்கள் இந்திய தேசிய வாதத்தினால் உணர்வூட்டப்பட்டு ஒரு மதச்சார் பற்ற ஜனநாயக சுதந்திர இந்தியா என்ற ஒரு நவீன இந்தியா கனவு சுதந்திர இயக்கத்தின் முன்னோடி களான நேதாஜி, பகத்சிங், லாலா லஜ்பத்ராய், காந்திஜி மற்றும் பிற தலைவர்களின் அறை கூவலுக்கிணங்க அவர்கள் தங்களது ஊதியம்தரும் வேலைகள் அனைத்தையும் உதறிஎறிந்ததோடு, ஆயிரக்கணக்கானோர் தங்களது இன்னுயிரை இழக்கவும் தயாரானார்கள். அவர்களின் அத் தியாகம் மற்றும் போராட்டங்கள் இறுதியாக நமக்கு விடுதலையைப் பெற்றுத்தந்தது. சுதந்திர இந்தியாவின் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் நம்நாட்டின் இந்த மதிப்புவாய்ந்த சுதந்திரப் பாரம்பரியத்தை எண்ணிப்பெருமையடைகிறோம்.

ஆனால் திருவாளர் மோடி தெள்ளத்தெளி வாக அவரது மூதாதையர்களான சுதந்திரத்திற்கு போராடினார். முந்தைய இந்து மகாசபா அல்லது அதன் இந்நாளைய வாரிசுகளான ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி.யைப்போல மேற்கூறியோரின் பாரம் பரியத்தைச் சேர்ந்தவரல்ல. இதே நேர்காணலில்' நீங்கள் இந்து தேசியவாதியா அல்லது தொழில் வளர்ச்சியை முன்னிறுத்தும் முதல்வரா' என்ற கேள்வி கேட்கப்பட்டபோது, அவர் தன்னை சமாளித்து கொள்வதற்காக சுற்றிவளைத்துப்பேசி பின்பு மிகத் தந்திரமாக நான் ஒரு இந்துத் தேசிய வாதி ஏனெனில் நான் பிறப்பால் இந்து என்று கூறி இந்துத்துவத்தையும் தேசியவாதத்தையும் ஒன்றாக ஒட்டவைத்தார். அதற்குப் பிந்தைய ஒரு சந்தர்ப்பத் திலும் அவர், "செக்யூலரிசம் கா பர்கா" (முக்காடு போட்ட மதச்சார்பின்மை) என்று குறிப்பிட்டார். திரை, அல்லது போர்வை என்ற சொற்களை தந்திர மாகத் தவிர்த்து செக்யூலரிசத்தை (மதச்சார்பின்மை) முஸ்லீம்களின் வழக்குச் சொல்லான 'பர்கா' என்று குறிப்பிட்டு ஏளனம் செய்தார். இந்திய தேசிய சுதந்திர இயக்கத்தின் உன்னதமான காலகட்டத்தில் உருவாகி வளர்ந்த ஜனநாயக, மதச்சார்பின்மை மதிப்புகளை காலிலிட்டு மிதித்து தன்னை தந்திர மாகக் காத்துக்கொள்ளும் இவர்போன்ற ஒரு தலைவரின் கையில் இந்த நாடு அகப்பட்டுக் கொண்டால் நாட்டின் எதிர்காலம் என்னவாகும் என்பது குறித்து ஒருவர் வியப்படையலாம். ஆனால் அவரின் இந்தப் பேச்சுக்கு நிச்சயம் பலனுண்டு! அவரின் இந்த வார்த்தைகளே ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி.யின் தொண்டர்களை தங்களின் தலைவர் களின் விடாப்பிடியான ஆணவத்தை ரசித்துக் கொண்டாடும்படிசெய்து, வெறியோடு தெருக் களில் திரளச்செய்துவிட போதுமானதாகும். இந்த பிரதான வகுப்புவாத சக்திகள் இந்த நாட்டை எந்த படுபாதாளத்திற்கு கொண்டு செல்லமுடியும் என்று புரிந்துகொள்வதற்கு தற்போது வெளிப்பட் டிருக்கும் கேடான அறிகுறிகளே போதுமானதாகும்.

## சுதந்திரத்திற்குப் பிறகு பலமான இடதுசாரி ஜனநாயக இயக்கங்கள் இல்லாததே வகுப்புவாதம் தலைதூக்குவதற்கு வழியமைத்தன

எப்படி, எந்த வரலாற்று வழியில் இன்றைய நிலையை நாம் வந்தடைந்திருக்கிறோம் என்பதே இப்போதைய கேள்வியாகும். நமது தேசிய சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் பல்வேறு பலவீனங்கள் இருந்தபோதிலும் கூட பிரிவினை சக்திகளான இந்துமகாசபா மற்றும் அதன் எதிரணியான முஸ்லீம் லீக் போன்ற மதம் மற்றும் இன்னபிறவற்றால் மக்களிடையே ஒற்றுமையைக் குலைக்கும் இயக் கங்கள் அந்நாளின் சுதந்திர இயக்க போராட்டக் களத்தின் முற்போக்கான நீரோட்டத்தின் செல் வாக்கின் காரணமாக பெருமளவிற்கு மக்களின் ஒற்றுமையை அவர்களால் குலைக்கமுடியவில்லை. ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு, உண்மையான மதச்சார்பற்ற, ஜனநாயக எண்ணம் கொண்ட மக்கள் சுதந்திர இயக்கத்தின் அந்த போராட்டப் பாரம்பரியம் மக்களின் எரியும் வாழ்க்கைப் பிரச்சினைகளின் அடிப்படையில் கட்டப்படும் போர்குணமிக்க இடதுசாரி ஜனநாயக இயக்கப்பதாகையின் கீழ் உயர்த்திப்பிடிக்கப்படும் என்று எதிர்பார்த்திருக்கக்

தொடர்ச்சி 8ம் பக்கம்

# ஆகஸ்ட் 5 : பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் 37வது நினைவு தினம்






**ஆகஸ்ட் 11, 2013 அன்று பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் 37வது நினைவுதினப் பொதுக்கூட்டம் தேனி, அல்லிநகரத்தில் நடைபெற்றது. தோழர் சி கே லூகோஸ் மத்தியக் கமிட்டி உறுப்பினர் உரையாற்றுகிறார். கூட்டத்தில் கலந்து கொண்டோர்.**

4ம் பக்கம் தொடர்ச்சி

ஃகிளாஸ்நாஸ்ட்" மாறிய சூழ்நிலையில் தேவையே என்று சொன்னார்கள். சி.பி.ஐ. (எம்) மின் முன்னாள் பொதுச்செயலாளர் EMS நம்பூதிரிபாட், சோவியத் யூனியன் கொண்டுவந்துள்ள "திறந்த மனப்பான்மை மற்றும் ஜனநாயகம் என்ற கோட்பாட்டை எதிர்ப்பவர்கள் கம்யூனிஸ்டுகளே அல்ல என்றார். ஆனால் நடந்தது என்ன? வெகுவிரைவிலேயே சோவியத் யூனியனில் எதிர்ப்புரட்சி நடந்தேறியது. இன்றிருப்பது சோவியத்ரஷ்யா அல்ல. மாறாக அது முதலாளித்துவ ரஷ்யா. இன்று மாஃபியாக்கள், லஞ்ச லாவண்ய அதிகாரிகள் ஆகியோரின் ஆட்சிதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்து பாசிச ஜெர்மனி சோவியத் ரஷ்யாவிடம் தோற்றவுடன் பலரும் பாசிசம் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது என்று அகமகிழ்ந்தனர். ஆனால் தோழர் சிப்தாஸ் கோஷ், "பாசிசம் என்பது முதலாளித்துவத்தின் கடைசி ஆயுதம்" என்றும் பாசிசம் ஒரு எதிர்ப்புரட்சி நடவடிக்கை என்றும் வர்ணித்தார். மேலும் அவர் கூறுகையில் "பாசிசம் என்பது ஆன்மீகமும் விஞ்ஞானத்தின் சில தொழில்நுட்ப அம்சங்களை சேர்ந்த கலவையே என்றார். அது குருட்டுத்தனமான வெறியை உருவாக்கி இயந்திரத்தனமான சிந்தனையை மக்களிடம் உருவாக்கும் என்றார்.

ஆகவேதான் தாய், மகன், தங்கை, போன்ற உன்னதமான உறவுகள் அதில் கண்ட அன்பு பாசம் என்பது இன்று மங்கிப்போயுள்ளது. சமீபத்தில் ஒரு தந்தை தன் ஐந்து வயது குழந்தையை மிருகத்தனமாக அடித்ததில் அந்தக் குழந்தை உயிருக்குப்போராடி வருகிறது. அதேபோல் சிறு குழந்தைகளின் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் பற்றிய செய்திகள் நம் ரோமங்களைச் சிலிர்க்கவைக்கிறது. ஏனெனில், மனிதன் இந்த முதலாளித்துவ சமுதாயத்தில் மனிதத் தன்மையை இழந்துகொண்டிருக்கிறான்.

தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் ஒரு தொழிற்சங்க மாநாட்டிலே பேசுகிறபோது, "மனித சமூகம் இதுவரை பெற்ற சிறந்த கலாச்சார, பண்பாடு, ஒழுக்க நீதிநெறிமுறைகள் எல்லாம் உழைக்கும் பாட்டாளிகளுக்கு கற்பித்தல் வேண்டும்" என்றார். பட்டினி கிடக்கும் நாடுகூட உயர்ந்த கலாச்சாரத்தைக் கொண்டிருந்தால் முன்னேறமுடியும் என்றார். ஆகவே, பாசிசத்தை எதிர்கொள்ள வேண்டுமெனில் கூட்டு வாழ்க்கை, கூட்டு சிந்தனை, பொதுநலம் ஆகியவைகளை மக்களுக்கு கற்பித்தல் வேண்டும்.

இன்று நாம் பார்க்கும் ஊழல்கள் என்பது 64 கோடி ரூபாய் போர்ஃபஸ் ஊழல்கள் போன்றவை அல்ல. இன்றைய ஊழல்கள் நூறு, ஆயிரம் கோடிகளைத்தாண்டி, ஒவ்வொரு ஊழலும் லட்சக்கணக்கான கோடிகளை எட்டியுள்ளது. அதுமட்டுமல்ல, இந்த ஊழல்களில் உயர் பதவியில் உள்ளவர்கள், பிரதமர் உட்பட சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதும் கவலையளிக்கிறது. இப்படி ஊழல்கள் அங்கிங்கெணாதபடி எங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மறுபுறம் சமீபத்தில் மஹாராஷ்ராவிலும், குஜராத்திலும் சிறுபான்மையினர் மீது மனித உரிமை மீறல்கள் தொடுக்கப்படுகின்றன. குஜராத் முதல்வர் நரேந்திரமோடி கோத்ரா சம்பவத்தை உதாரணம் காட்டி நாய்குட்டி அடிபட்டு இறந்ததாக வெளிப்படையாகவே உவமை கூறுகிறார். கோத்ரா சம்பவத்திற்குப் பின்னால் நடந்த தாக்குதல்கள் சிறுபான்மை மதத்தினர் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல். மனிதப்படுகொலையில் நேரடியாகவே பங்கெடுத்த ஒருவர், தொடர்ந்து அச்சமூகத்தவர் மீது பன்முகத்தாக்குதல்களைத் தொடுத்துக் கொண்டிருப்பவர் இந்த நாட்டின் பிரதம வேட்பாளராக முன்னிறுத்தப்படும் கேவலமான நிலையை பார்க்கவேண்டியுள்ளது. இதேபோல், இந்திராகாந்தி அவர்கள் கொல்லப்பட்டபோதும், ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் இன்றுவரை அவர்களை கொன்றவர்கள் தண்டிக்கப்படவில்லை. சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையைத்தான் நாம் முதலாளித்துவ ஆட்சியில் முதலாளித்துவ சமுதாயத்தில் கண்ணுறுகிறோம்.

இந்த அநீதிகளை எதிர்த்து மக்கள் பரந்துபட்ட ஜனநாயக இயக்கங்களை நடத்தவேண்டும். அப்படிப்பட்ட இயக்கங்கள் மூலம்தான் இப்படிப்பட்ட அநீதிகளிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் மக்கள் விடுபட முடியும். நந்திகிராம் இயக்கம், கூடங்குளம் அணுஉலையை எதிர்த்த இரண்டாண்டுகாலமாக மக்களின் மாபெரும் போராட்ட இயக்கம், அதேபோல, ஊழல்களுக்கெதிரான அன்னாஹசாரே அவர்களின் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கெடுத்த இயக்கம், சமீபத்தில் டெல்லியில் மருத்துவ மாணவியின் பாலியல் வன்முறைக்கு எதிராக மிகப்பெரிய போராட்டங்கள் நாட்டையே உலுக்கியது. இதிலிருந்து நமக்கு தெரிவது, மக்கள் அநீதிகளை எதிர்த்து போராட தயாராக இருக்கிறார்கள். போராட்டங்கள் மூலம் அணிதிரளத் தயாராகிவிட்டனர். சரியான தலைமை, சரியான வழிகாட்டுதல் இல்லை என்பதுதான் இந்தப் போராட்டங்களின் குறைபாடு. ஆகவே சரியான இலக்கை எட்டமுடியவில்லை.

மக்கள் அநீதிக்கெதிராக அடக்குமுறைக்கெதிராக அலை அலையாக போராட்டங்களில் தொடர்ந்து பங்கு கொள்வார்கள். ஒருநாள் இந்த மக்கள் போராட்டங்கள் வெற்றியடையும் என்று தோழர் சிப்தாஸ் கோஷ் கூறியுள்ளார். எனவே தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனைகளை மக்களிடையே எடுத்துச் சென்று மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கான வெகுஜனப் போராட்டங்களைக் கட்டினால் நமக்கு வெற்றி நிச்சயம்.

மனித சமுதாய விடுதலைக்காக போராடிய மாபெரும் புரட்சியாளர்களாகிய பகத்சிங், குதிராம் போஸ், பாரதியார், போன்றவர்களின் போராட்ட வரலாற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வோம் புரட்சியின் முன்னேற்றத்தை எந்த சக்தியாலும் தடைபோடமுடியாது பாட்டாளிவர்க்க சோசலிச புரட்சி நிச்சயம்.

**முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சி வெல்க!**

**தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களுக்கு செவ்வணக்கம்!**

# யு எஸ் ஆதரவு எகிப்திய ராணுவத்தால் மக்கள் படுகொலை செய்யப்பட்டதை எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கண்டிக்கிறது

*தோழர் பிரவாஸ் கோஷ், பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஆகஸ்ட் 19, 2013 அன்று வெளியிட்ட அறிக்கை:*

யு எஸ் ஆதரவுபெற்ற எகிப்து ராணுவம் ஆகஸ்ட் 14, 2013லிருந்து பல நூறு எகிப்திய மக்களை படுகொலை செய்தும் பல்லாயிரக் கணக்கானோரை படுகாயமுறச்செய்ததை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். "அரேபிய எழுச்சி" என உலக முழுவதும் போற்றப்பட்ட நாடுதழுவிய தன்னெழுச்சியான போர்குணமிக்க வெகுஜன எழுச்சியின் அழுத்தத்தின் காரணமாக ஒரு வருடத்திற்கு முன்புதான் கொடுங்கோலர் எதேச்சாதிகார ஹோஸ்னி முபாரக் பதவினை துறந்து ஓடியதனால் எகிப்திய ராணுவத்தின் 41 வருட கொடுமையான, சர்வாதிகார ஆட்சி முடிவிற்கு வந்தது.

ஆனால், முகமது மோர்சியின் தலைமையின் கீழ் முஸ்லீம் பிரதர்ஹுட்டின் ஒடுக்குமுறை அடிப்படைவாத ஆட்சிக்கெதிராக சற்றேரக்குறைய தன்னெழுச்சியான மக்கள் எழுச்சியின் குணாம்சத்தைப் பெற்றிருக்கிற, நடைபெற்றுவரும் சக்தி வாய்ந்த மக்கள் இயக்கத்தில் ஒரு உறுதியான, சக்திவாய்ந்த மதசார்பற்ற ஜனநாயக தலைமை இல்லாததை சாதகமாக்கிக்கொண்டு தற்போது மீண்டும் ஆட்சியைக்கைப்பற்ற எகிப்திய ராணுவம் மூர்க்கத்தனமாக முயற்சித்துவருகிறது. பிற்போக்கு அடிப்படைவாத மோர்சி அரசாங்கத்திற்கெதிராகவும் ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் கோரிக்கைகளுக்காகவுமான முன்னேறிவரும் மக்கள் எழுச்சியை ஒடுக்கி, அங்கு போராடிவரும் பொது மக்களின் நலன் மற்றும் அவர்களின் ஜனநாயக அபிலாஷைகளுக்கு தீங்கு விளைவித்து, அடிப்படைவாத முஸ்லீம் பிரதர்ஹுட்டானது மீண்டெழுந்து, ஆட்சியை கைப்பற்ற உதவுவதே மக்கள் கிளர்ச்சியின் மீதான சமீபத்திய கொடூர தாக்குதலின் உள்நோக்கமாகும் என்பது மிகத் தெளிவு.

எதேச்சாதிகார பாசிச யு எஸ் ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற முஸ்லீம் பிரதர்ஹுட் வளர்ந்து தன்னை உறுதிபடுத்தி' கொண்டுவரும் எல்லா வழிகளையும் அடைப்பதோடு அதன் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றும் கொடிய முயற்சியை அதே சமயம் ராணுவத்தின் கொலை களியாட்டத்தை உடனடியாக நிறுத்த நிர்ப்பந்திக்கவும், ஜனநாயகத்தை மீட்கவும் உடனே அதிகாரத்தை மக்களிடம் ஒப்படைக்கவுமான முடிந்ததனைத்தையும் செய்யுமாறு முற்போக்கு ஜனநாயக எண்ணங் கொண்ட எகிப்திய மக்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

Registered News Paper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 27th September 2013

பாட்டாளி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registrar of Newspaper in India No : 62018/88

# ஒன்றுபட்ட ஜனநாயக போராட்டத்தின் மூலம்தான் வகுப்புவாதத்தை முறியடிக்க முடியும்

6ம் பக்கம் தொடர்ச்சி

கூடும். ஆனால், புதிதாக விடுதலையடைந்த முதலாளித்துவ இந்திய அரசில் மக்களின் வேதனை மிகுந்த வாழ்க்கைப்பிரச்சினைகள் தீவிர முதலாளித்துவ சுரண்டல் காரணமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் அதிகரிக்கத்துவங்கியது. மக்களின் வாழ்க்கைப்பிரச்சினையை மையப்படுத்திய எந்தவொரு ஒன்றுபட்ட போராட்ட இயக்கமும் அதிகார நாற்காலியில் அமர்ந்திருக்கிற ஆளும் வர்க்கம் மற்றும் அதன் அரசியல் ஏஜெண்டான காங்கிரஸுக்கு ஆபத்தாகவே முடியும். இவ்விஷயம் தான் ஆளும் வர்க்கம் பி.ஜே.பி.க்கு தனது முழு ஆதரவுக்கரத்தையும் நீட்டும்படி செய்தது, மேலும் புதிதாகப்பிறந்த பி.ஜே.பி மக்கள் ஒற்றுமையைக் குலைக்க தனது வெறிகொண்ட முஸ்லீம் எதிர்ப்பை படிப்படியாக உயர்த்திட காங்கிரஸ் ஆட்சி ஒரு பாதுகாப்பு குடையை மறைமுகமாக வழங்கிடும்படியும் செய்தது.

நாடுதழுவிய பலமான இடதுசாரி ஜனநாயக இயக்கங்கள் நடத்தப்பட்டு வந்திருக்குமேயானால், காங்கிரஸினால் மறைமுகமாக ஆதரவளிக்கப்பட்டு நாட்டின் பல்வேறு இடங்களில் வகுப்புவாதப் பதற்றத்தையும், கலவரங்களையும் தொடர்ந்து தூண்டிவிடும் ஆர்.எஸ்.எஸ்ஸின் விஷமத்தனமான வெறிகொண்ட வகுப்புவாத அரசியலுக்கு எதிராக போராடுவதற்கான முக்கியத்துவத்தை அவர்கள் புரிந்துகொண்டிருக்கக் கூடும். ஆனால் மக்களுக்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொள்ளும் போலி மார்க்ஸிய, சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்) இயக்கங்கள் வகுப்புவாதத்தினை எதிர்த்து தீவிரமாக போராட்டங்களை முன்னெடுக்காமலும், முதலாளித்துவ சமூக அமைப்பை எதிர்த்து ஒரு வார்த்தையும் பேசாமலும் மக்களின் ஆதரவையும் அதிருப்தியையும் சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்களில் சீட்டுகளைப் பெறுவதற்காகவும் அரசியல் ஆதாயத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்கிறது. இவ்வாறாக அவர்கள் குருட்டுத்தனமாக ஆளும் வர்க்க அரசியலுக்குத் துணை போகிறார்கள். இவ்வாறான போக்கு இக்கட்சிகளை படிப்படியாக போராட்டப்பாதையைவிட்டு விலகும்படியும், பதவி மற்றும் அதிகாரத்திற்காக முழுவதுமாக ஆளும் வர்க்கத்திற்கு அடிபணியும் சேவகர்களாகவும் மாற்றிவிடும். இதன் காரணமாக ஆர்.எஸ்.எஸ்க்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. மெல்ல மெல்ல தனது விஷக்கொடுக்குகளை வெளியில் நீட்டி கொஞ்சம் கொஞ்சமாக பலம் பலம்சேர்த்துக் கொண்டு முதலாளி வர்க்கத்தின் ஆதரவைப் பெற்று **1995**ல் மத்திய அரசில் அதிகாரத்திற்கு பி.ஜே.பி. வந்தது. இருப்பினும் கூட அவர்கள் ஒருபுறம் ஏகபோக ஆதரவையும் மறுபுறம் முஸ்லீம் வெறுப்பையும், இந்துத்துவ திட்டத்தையும் விட்டுவிடவில்லை. தற்பொழுதும் கூட மோடி தனது இந்துத்துவவெறி அரசியலுக்கு புத்தூக்கம் கொடுக்கத் துவங்கியபோது பி.ஜே.பியின் தலைவர் ராஜ்நாத் சிங் தனது அமெரிக்கப் பயணத்தின் போது அதன் ஆளும் வர்க்கத்திடம் பி.ஜே.பி அதிகாரத்திற்கு வந்தால் காங்கிரஸின் ஏகபோக ஆதரவு கொள்கையினைத் தொடர்வதிலிருந்தும் மற்றும் யு.எஸ் ஏகாதிபத்தியத்துடன் இணக்கமான உறவைத் தொடர்வதிலிருந்தும் விலகாது என்பதை உறுதிப்படுத்துவதில் முனைப்போடு இருந்தார். மேலும் ஒருபடி மேலே சென்று அவர்கள் யு.எஸ் ஆளும் வர்க்கத்திடம் மோடிக்கு விசா வழங்கும்படி கெஞ்சும் நிலைக்குச் சென்றார்கள். இவர்கள் எப்படிப்பட்ட தேசியவாதிகள் பாருங்கள்!

தற்போது நிலைமை எங்கு சென்று கொண்டு இருக்கிறது? **2002** குஜராத் இனப் படுகொலையின் முதன்மையான சூத்திரதாரியான மோடியை, பிரதான வகுப்புவாத சக்தியான ஆர்.எஸ்.எஸ் இயக்கம் தாங்கிப்பிடித்து அவரை தேசிய அரசியல் ஏணியில் ஏற்றிவிட தனது முழுபலத்தையும் பிரயோகிக்கிறது. ஏகபோகவாதிகளும் கூட அவரிடத்தில் இதுவரையில் கேள்விப்படாத பல தகுதிகளும் குணங்களும் இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். ஏகாதிபத்தியவாதிகளின் கடைக்கண் பார்வையும் அவர் மீது விழுந்திருக்கிறது. தொலைக்காட்சி, பத்திரிகை ஊடகங்களும் கடந்த காலத்தில் அவர் செய்த மனிதத்தன்மையற்ற செயல்களுக்கு எவ்வித கண்டனமும் தெரிவிக்காமல், திரும்பத் திரும்ப மோடி மந்திரத்தையே உச்சரித்து மறைமுகமாக அவரின் மிகமோசமான வகுப்புவாத கண்ணோட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்பு செய்கிறார்கள். மீடியாக்களின் இந்த ஆதரவினால் மேலும் தைரியம்பெற்ற மோடி, முஸ்லீம்கள் மீது மேலும் விஷம்கக்கி வருவதுடன், நமது தேசியவாத இயக்கத்தின் மதிப்புமிக்க பாரம்பரியத்தைக் காலிலிட்டு மிதித்துவருகிறார். அவர் எத்தகைய ஆணவத்தோடு இதைச் செய்த போதும், ஜனநாயக எண்ணம் கொண்ட இந்த நாட்டு மக்களும், உலக மக்களும் கூட, **2002** குஜராத் இனப்படுகொலைக்குக் காரணமாக இந்த சூத்திரதாரியின் மீதான கண்டனத்தை திரும்பப் பெறவுமில்லை அவரை உத்தமர் என்று யாரும் ஒப்புக்கொள்ளவும் இல்லை. மக்களின் பார்வையில் இன்னும் அவர் குற்றவாளிதான்.

ஆனால் மிகவும் வருந்தத்தக்க வகையில் பி.ஜே.பியை எதிரணியாகக் கருதும் எந்த ஒரு பாராளுமன்ற அரசியல் கட்சியும் இது குறித்து கவனத்தில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. நாட்டின் மற்றுமொறு பிரதான பூர்ஷுவாக்கட்சியான காங்கிரஸும் கூட வரவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலை மனதில் கொண்டு வாயை மூடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வப்போது எதிர்ப்புக் காட்டினாலும் குறிப்பாக **2002**ல் மோடி என்னசெய்தார் என்பது பற்றியும் அவர் செய்த அந்தப் 'பாவங்களிலிருந்து' எப்படி விமோசனம் பெற்றார் என்பது பற்றியும் வாய்திறக்க மறுக்கிறார்கள். மோடி உத்தமராவதற்கு ஏதோ ஒரு வகையில் காங்கிரஸும் உள்ளூர காரணமாக இருந்திருக்கிறது. அவ்வாறில்லையெனில் தற்போது ஊடகங்கள் குறிப்பிடுவது போல காங்கிரஸ் கடைபிடித்து வரும் மென்மையான இந்துத்துவ அரசியல் காரணமாக அவர்கள் இது வரையில் அனுபவித்து வருகின்ற பெரும்பான்மை சமூகத்தின் வாக்குவங்கியை இழப்பார்கள். மார்க்சிஸ்ட்கள் என்று அழைக்கப்படுகின்ற கட்சிகளும் கூட மோடி இவ்வாறாக மேடைகளில் முழங்கிவருவது குறித்து கவனத்தில் எடுக்கிறார்களா? ஒருகாலத்தில் இடது சாரிவாதத்தின், புரட்சியின் வெற்றியாளர்கள் என்று இவர்கள் தங்களை அழைத்துக் கொள்ளவில்லையா? அவ்வப்போது தங்களுக்கு இருக்கும் மக்களது ஆதரவு குறித்து அவர்கள் ஜம்பம் அடித்துக் கொள்வதில்லையா? இவைமட்டுமல்லாது அப்போதும் இப்போதும் மோடியின் செயல்களுக்கு எதிராகவும் மற்றும் இப்போது அவர் தம்பட்ட மடிக்கும் கருத்துகளுக்கு எதிராக அக்கறையோடு இயக்கங்கள், தர்ணாக்கள், போராட்டங்கள் ஆகியன வற்றை அணிதிரட்டுகிறார்களா? மேலும் இந்த வகுப்புவாதத்தை எதிர்க்கும் வாய்வீச்சு விமர்சகர்கள் மோடி எப்படிப்பட்ட ஒரு அபாயகரமான சக்தி என்பதை தோலுரிக்கின்ற வகையில் அவர்களது கட்சிப் பத்திரிகைகளில் ஏதேனும் கட்டுரைகளை எழுதுகிறார்களா? இல்லை. மாறாக அவர்கள் தங்களது அற்பமான பாராளுமன்ற அரசியல் ஆதாயங்களுக்காக தற்போது காங்கிரஸோடும் இதற்குக் கொஞ்ச காலம்முன்பு பி.ஜே.பி யுடன் இணைந்து சில கோரிக்கைகளுக்காக பாரத் பந்த்க்கும் அழைப்புவிடுத்ததுடன் தங்களின் மக்கள் சேவையை முடித்துக்கொண்டார்கள். மோடிக்கு எதிராகவும், அவரின் வகுப்புவாதத்திற்கு எதிராக பத்திரிகை வழியாவும் மற்றும் போராட்டங்கள் மூலமாகவும் தொடர்ந்து எதிர்ப்புக்காட்ட அவர்கள் ஏன் தயங்குகிறார்கள்? இவ்வாறு அவர்கள் தயங்குவதற்குக் இந்த எல்லா அரசியல் கட்சிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதுதானே காரணம்? ஆகவே அவர்கள் தங்களின் பிழைப்பிற்காக ஆளும் முதலாளி வர்க்கத்திற்கு அடிபணிந்து சேவைசெய்வதைத் தவிர வேறு வழியில்லை. மேலும் தற்போது அந்த வர்க்கமே தனக்கான நபரை ஆர்.எஸ்.எஸ் மற்றும் மோடியில் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிகிறது.

## ஆர்.எஸ்.எஸ் ஏகபோகவாதிகளின் கூட்டணி மோடிக்கு வக்காலத்து வாங்குவது நாட்டை அழித்துவிடும்

ஆர்.எஸ்.எஸ் ஸின் பின்புலத்தோடு மோடி மத்தியில் அரசதிகாரத்திற்கு வர காய்நகர்த்துவது, ஒரு கொடூரமான இனப்படுகொலையை திட்டமிட்டு நடத்திய அரக்ககுணம் படைத்த மூர்க்கத்தனமான ஒருவரை பதவிக்குக் கொண்டுவரும் என்பது மட்டுமல்ல மிகவும் அபாயகரமான ஆர்.எஸ்.எஸ் – ஏகபோகக் கூட்டணி நாட்டை ஆளும்படியான நிலைமையை உருவாக்கிவிடக்கூடும். மேலும் அதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரிந்தும் கூட ஆளும் வர்க்கத்திற்குச் சேவகம் செய்கின்ற கட்சிகள் இந்த அபாயத்தை எதிர்த்து எதிர்ப்புக் குரல் எழுப்புவது ஒரு புறம் இருக்கட்டும், ஒரு சுண்டுவிரலைக்கூட நீட்டவில்லை. அப்படியானால் எதிர்த்துப் போராடக்கூடிய வல்லமை மக்களுக்கு மட்டுமே உண்டு அவ்வாறு போராடுவதைத் தவிர வேறுமாற்றுவழி ஏதுமில்லை. முதலாளித்துவம் அவர்களை எப்படியெல்லாம் ஒட்டஒட்ட உறிஞ்சுகிறது என்பதை அன்றாட அனுபத்திலிருந்து அவர்கள் நன்றாகவே உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். கட்டுக்கடங்காத விலைவாசி உயர்வு, வேலையின்மை, வேலையிழப்பு, மக்களைப் பழிவாங்கும் (AFSPA) போன்ற கறுப்புச் சட்டங்கள், எல்லையில்லாத வேஷ தாரித்தானம், சந்தர்ப்பவாதம், அதிகாரஆணவம், எங்கும் மண்டிக்கிடக்கும் ஊழல், ஊழல் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டவர்களும் கூட வெக்கம்கெட்ட வகையில் விடுவிக்கப்படுவது. அரசு மற்றும் நிர்வாகத்தின் அலட்சியத்தினாலும், கலாச்சார சீர்கேட்டினாலும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் மீது மனிதத் தன்மையற்ற தாக்குதல்கள், கொடுமைகள் என இவையனைத்தும் கூட ஈவிரக்கமற்ற மக்கள் விரோத முதலாளித்துவம் எவ்வாறு ஒவ்வொரு தனிமனிதனையும் மற்றும் ஒட்டுமொத்த சமூக மக்களையும் சீரழித்து சின்னாபின்னப்படுத்துகிறது என்பதைக் காட்டுவதற்குப் போதுமானதல்ல. நிலைமை இவ்வாறிருக்க, ஆளும் வர்க்கம் ஆர்.எஸ்.எஸ் போன்ற ஒரு பிற்போக்கு சக்தியுடன் கைகோர்த்துக் கொள்ளுமானால் அது ஆளுபவர்களை மேலும் ஈவிரக்கமற்றவர்களாகவும் கொடுங்கோலர்களாகவும் மாற்றிவிடும். எனவே, எந்த ஒரு தனிமனிதனையும் விட்டு வைக்காத சுரண்டல்–ஒடுக்குமுறை முதலாளித்துவ அரசை எதிர்த்துப் போராடுவதற்கு ஜாதி, மத, இன, மொழி, மற்றும் இன்னபிற வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து மக்கள் ஒரு சரியான உயர்ந்த சித்தாந்த–கலாச்சார–நீதிநெறி ஒழுக்கத் தரத்தில் நின்று மக்களை ஒன்றுபடுத்தி மாபெரும் பலத்தோடு ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுக்கவேண்டியது அவசியமாகும். அவ்வாறாக மிகஉயர்ந்த நீதிநெறி, ஒழுக்கத்தரத்திலிருந்து கட்டப்படும் இயக்கங்கள் மட்டுமே நாடுமுழுவதிலும் வகுப்புவாத, பாசிச விஷத்தைக் கக்கி தலை தூக்க நினைக்கும் விஷஜந்துக்களுக்கு வேலிபோடும் தடையாக இருக்கமுடியும். அவ்வாறான இயக்கங்கள் மட்டுமே வகுப்புவாதத்தை பூண்டோடு அழிக்கும் வல்லமைபெற்றதாக இருக்கமுடியும். இந்தக் கடமையினை நிறைவேற்றுவதற்கு மக்கள் நெஞ்சுயர்த்தி வெளிவந்து பொறுப்புகளைச் சுமந்து போராட முன்வரவேண்டும். இந்நாட்டின் ஒரு புரட்சிகரக் கட்சி என்ற முறையில் எஸ்.யு.சி.ஐ. (கம்யூனிஸ்ட்) அப்படிப்பட்ட வெகுஜன இயக்கங்களைக் கட்ட மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சியை பலப்படுத்தி இந்நாட்டிற்கு வரவிருக்கும் வகுப்புவாத அபாயத்திலிருந்து நாட்டை பாதுகாக்க முன்வருமாறு எமது கட்சி அறைகூவி அழைக்கிறது.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in